RNI Number: TNBIL/2020/79792

# METRO PEOPLE ™

## WEEKLY MAGAZINE

EVERY SUNDAY
ENGLISH & TAMIL WEEKLY MAGAZINE

ஞாயிறுதோறும்
ஆங்கிலம் மற்றும் தமிழ் வார இதழ்

| 25 பிப்ரவரி 2024 | மலர் 1 - இதழ் - 76 | விலை - ரூ. 5/- | 24 பக்கங்கள் |
|---|---|---|---|
| 25 FEBRUARY 2024 | VOLUME 1 - ISSUE - 76 | PRICE - Rs.5/- | 24 PAGES |



அரசியல் செய்திகள்

# தமிழக வேளாண் நிதிநிலை அறிக்கை தாக்கல்: முதல்வரின் 'மண்ணுயிர் காப்போம்' திட்டம் அறிவிப்பு

சென்னை: அரசின் வேளாண் பட்ஜெட்டை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் சட்டப்பேரவையில் தாக்கல் செய்தார். மண் வளத்தை காக்க முதல்வரின் 'மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்' திட்டம், பயிர் காப்பீடு திட்டத்துக்கு ரூ.1,775 கோடி, கரும்பு டன்னுக்கு ரூ.215 ஊக்கத் தொகை ஆகியவை அதில் அறிவிக்கப்பட்டுள்ளன. சட்டப்பேரவையில் 4-வது ஆண்டாக வேளாண் பட்ஜெட்டை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார்.

காலை தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்ற அவர், 9.57 மணிக்கு முதல்வர் ஸ்டாலினுடன், பேரவை அரங்குக்குள் வந்தார். தொடர்ந்து, காலை 10 மணிக்கு வேளாண் பட்ஜெட்டை தாக்கல் செய்து அவர் பேசியதாவது:2020-21ல் 1.52 கோடி ஏக்கராக இருந்த மொத்த சாகுபடி பரப்பு, 2022-23ல் 1.55 கோடி ஏக்கராக உயர்ந்தது.

இதனால், உணவு தானிய உற்பத்தியும் 1 கோடியே 17 லட்சத்து 91 ஆயிரம் டன்னாக அதிகரித்துள்ளது. நீர்நிலைகளைத் தூர்வாரியும், புனரமைத்தும், சீரமைத்தும், புதிய நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை ஏற்படுத்தியும், மழைநீர் வீணாகாமல் சேகரிக்கப்பட்டு, நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டது. மேலும், நுண்ணீர் பாசனம் போன்ற தொழில் நுட்ப பயன்பாட்டை அதிகரித்ததால், 2020-21ல் 89.06 லட்சம் ஏக்கராக இருந்த பாசனம் பெற்ற பயிர் பரப்பு, 2022-23-ல் 95.39 லட்சம் ஏக்கராக உயர்ந்துள்ளது.

கோடை மழை, தென்காசியில் மழைகுறைவால் ஏற்பட்ட மகசூல் இழப்பு, தென் மாவட்டங்களில் கடந்தாண்டு டிசம்பரில் இயற்கை பேரிடரால் ஏற்பட்ட பயிர் சேதத்துக்கு ரூ.208.20 கோடி நிவாரணம், 2.74 லட்சம் விவசாயிகளுக்கு விரைவில் வழங்கப்படும்.
கடந்த 2022-23ம் ஆண்டில் 35.12 லட்சம் ஏக்கராக இருபோக சாகுபடி பரப்பு உயர்ந்துள்ளது. நடப்பாண்டில் இயற்கை இடர்பாடுகளுக்கு இடையிலும், 1.14 கோடி ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
2023-24ம் ஆண்டில் 1.27 கோடி டன் உணவு தானிய உற்பத்தியை எட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மன்னுயிர் காப்போம் திட்டம்: மண் வளத்தை பேணவும், உயிர்ம வேளாண்மை போன்ற அனைத்து வேளாண் செய்முறைகளையும் ஊக்கப்படுத்தவும், 'முதல்வரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்' என்ற புதிய திட்டம், வரும் நிதியாண்டில் 22 திட்டங்களுடன் ரூ.206 கோடி நிதியில் செயல்படுத்தப்படும். இதில் குறிப்பாக, 2 லட்சம் விவசாயிகள் பயனடைய 2 லட்சம் ஏக்கரில் பசுந்தாள் உரம் பயிரிட ரூ.20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



வேளாண் விளைபொருட்கள், மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்து, முத்திரையிட்டு விற்பனை செய்ய ஏதுவாக 100 உழவர் அங்காடிகள், ரூ.5 கோடி மானிய நிதியில் செயல்படுத்தப்படும். கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், வரும் ஆண்டில் 2,482 கிராம ஊராட்சிகளில் ரூ.200 கோடி நிதியில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

பயறு, துவரை, எண்ணெய் வித்து, எள், சூரிய காந்தி உள்ளிட்ட பயிர்களின் சாகுபடியில் தேவைக்கேற்ற உற்பத்தியை எட்ட ரூ.108 கோடி நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.ஒரு கிராமம் ஒரு பயிர் திட்டம்:

விதைப்பு முதல்அறுவடை வரை அனைத்து தொழில்நுட்பங்கள், நிரந்தர பூச்சி கண்காணிப்பு திடல்கள் அமைத்து விழிப்புணர்வு ஏற்படுத்த ஒரு கிராமம் ஒரு பயிர் திட்டம் 15,280 வருவாய் கிராமங்களில் செயல்படுத்தப்படும். தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்துக்கு ரூ.65.30 கோடி ஒதுக்கப்படும்.

2,482 கிராம ஊராட்சிகளில் கிராம வேளாண் முன்னேற்றக் குழுக்கள் அமைக்க ரூ.2.48 கோடி, பலன் தரும் பருத்தி சாகுபடிக்கு ரூ.14.20 கோடி ஒதுக்கப்படுகிறது. இயற்கை சீற்றங்களால் விவசாயிகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பில் இருந்து மீட்க, ரூ.1,775 கோடியில் பயிர்க்காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.
ஊக்கத்தொகை: சர்க்கரை ஆலைகளுக்கு 2023-24 அரவைப் பருவத்துக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு டன்னுக்கு ரூ.215 சிறப்பு ஊக்கத்தொகை வழங்க ரூ.250 கோடி ஒதுக்கப்படுகிறது.
நோய் எதிர்ப்பு, அதிக சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு ரக விதைகள் வழங்க ரூ.7.92 கோடி ஒதுக்கப்படுகிறது. தோட்டக்கலைத்துறை சார்பில், நுண்ணீர் பாசன அமைப்பை 2.22 லட்சம் ஏக்கர் பரப்பில் அமைக்க ரூ.773.23 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது.

மா, பலா, வாழை என முக்கனி மேம்பாட்டுக்கான சிறப்பு திட்டத்தை செயல்படுத்த ரூ.41.35 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. செங்காந்தள், மருந்துக்கூர்க்கன், சென்னா, நித்திய கல்யாணி போன்ற மூலிகை பயிர்களின் சாகுபடியை ஊக்குவிக்க ரூ.5 கோடி நிதி ஒதுக்கப்படும். தமிழகத்தில் 26,179 விவசாயிகளுக்கு ரூ.170 கோடி நிதியில் வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மானியத்தில் வழங்கப்படும்.
விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்றுத்துறை இனி விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை என பெயர் மாற்றம் செய்யப்படும். பெரம்பலூர், தூத்துக்குடி, கிருஷ்ணகிரி, ராமநாதபுரம், தருமபுரி, திண்டுக்கல், விருதுநகர் மாவட்டங்களில் இயற்கை வள மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ.43 கோடி ஒதுக்கப்படும். கூட்டுறவுத்துறை: கூட்டுறவு பயிர்க்கடன் வழங்க ரூ.16,500 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, வட்டி மானியத்துக்கு ரூ.700 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது.

ஆடு, மாடு, கோழி வளர்ப்போருக்கான முதலீட்டு கடன் வட்டி மானியத்துக்கு ரூ.200 கோடி, கூட்டுறவு வங்கி கணினி மயமாக்கத்துக்கு ரூ.141 கோடி ஒதுக்கப்படுகிறது. உணவு பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், உணவு மானியத்துக்கு ரூ.10,500 கோடியும், தமிழக அரசின் நெல் கொள்முதல் ஊக்கத் தொகை வழங்க ரூ.500 கோடியும் ஒதுக்கப்படுகிறது.

காவிரி டெல்டா பகுதிகளில் 5,338 கிமீ நீளம் கொண்ட ஆறுகள், கால்வாய்கள், வாய்க்கால்கள் ரூ.110 கோடியில் தூர்வாரப்படும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பண்ணை குட்டைகள், கசிவுநீர் குட்டைகள் போன்ற இயற்கை வள மேம்பாட்டுப்பணிகளுக்காக ரூ.7 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

23.51 லட்சம் வேளாண் பாசன இலவச மின் இணைப்புகளுக்கு, மின்கட்டண தொகையாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்துக்கு ரூ.7,280 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வேளாண் துறையின் திட்டங்களுக்காக மொத்தம் ரூ.42,281 கோடியே 88 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சர் பேசினார்.

**முக்கிய அம்சங்கள்**

- வேளாண் பட்ஜெட் மொத்த நிதி ரூ.42,281.88 கோடி
- ஒரு கிராமத்தில் ஒரு பயிர்
- சிறுதானிய இயக்கம்
- உணவு மானியமாக ரூ.10,500 கோடி ஒதுக்கீடு
- இயற்கை வள மேம்பாட்டுக்கு ரூ.7,000 கோடி
- தேவைக்கேற்ப வேளாண் பயிர் பரப்பு விரிவாக்கம்
- முக்கனி மேம்பாட்டுக்கு சிறப்பு திட்டம்

RNI Number: TNBIL/2020/79792

# METRO PEOPLE ™

## WEEKLY MAGAZINE

EVERY SUNDAY | ஞாயிறுதோறும்
ENGLISH & TAMIL WEEKLY MAGAZINE | ஆங்கிலம் மற்றும் தமிழ் வார இதழ்

25 பிப்ரவரி 2024 | மலர் 1 - இதழ் - 76 | விலை - ரூ. 5/- | 24 பக்கங்கள்
25 FEBRUARY 2024 | VOLUME 1 - ISSUE - 76 | PRICE - Rs.5/- | 24 PAGES

# நெம்மேலியில் ரூ.2,465 கோடி மதிப்பிலான கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தை திறந்து வைத்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



நெம்மேலியில் ரூ.2.465 கோடி மதிப்பிலான கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். சென்னை நகரின் குடிநீர் பிரச்சினையை தீர்க்க 2003ம் ஆண்டு நெம்மேலி மற்றும் மீஞ்சூரை அடுத்த காட்டுப்பள்ளியில் தினமும் தலா 100 மில்லியன் லிட்டர் கொள்ளளவு திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

இந்த 2 சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து பெறப்படும் குடிநீர் சென்னையின் மொத்த குடிநீர் தேவையில் 30 சதவீதத்தை பூர்த்தி செய்து வருகிறது. இதனால் நெம்மேலியில் கூடுதலாக ரூ.1516.82 கோடி செலவில் 2-வது சுத்திகரிப்பு ஆலை அமைக்கும் பணி கடந்த 2019ம் ஆண்டு முதல் நடைபெற்று வந்தது.

தினமும் 15 கோடி லிட்டர் திறன் உடைய சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்காக மிகப்பெரிய குழாய்கள் அங்கு பதிக்கப்பட்டு வந்தது. இது மட்டுமின்றி சோழிங்கநல்லூரில் பெரிய அளவில் கீழ்நிலை நீர்த்தேக்கம் மற்றும் 48 கி.மீ. தூரம் வரை குழாய்கள் பதிக்கும் பணியும் நடைபெற்று வந்தன. இந்நிலையில் அனைத்து பணிகளும் முடிந்து 4 மாதங்களுக்கு முன்பு பரீட்சார்த்த முறையில் சோதனை ஓட்டமும் தொடங்கியது.

சோழிங்கநல்லூர், உள்ள கரம், ஆலந்தூர், பரங்கிமலை, மேடவாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம், கீழ்க்கட்டளை, மூவரசம்பேட்டை, பல்லாவரம் ஆகிய பகுதிகளுக்கு அனுப்பி வைத்து பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இந்த பணிகள் அனைத்தும் இறுதிக்கட்டத்துக்கு வந்ததால் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, குறு,ம் சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் உயர் அதிகாரிகள் நெம்மேலிக்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இந்நிலையில் நெம்மேலியில் ரூ.2,465 கோடி மதிப்பிலான கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். ஆலையின் மூலம் சோழிங்கநல்லூர், வேளச்சேரி, மடிப்பாக்கம் பகுதிகளில் 9 லட்சம் மக்கள் பயன்பெறுவர். 95 முடிவுற்ற திட்ட பணிகளை தொடங்கி வைத்து , ரூ.2,058 கோடியில் 40 புதிய திட்டப் பணிகளுக்கும் முதல்வர் அடிக்கல் நாட்டினார்.



**அரசியல் செய்திகள்**

# வேலைவாய்ப்பு, அரசியலில் பங்களிப்பை ஊக்கப்படுத்த தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை: முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்

தமிழகத்தில் திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு, அரசியலில் பெண்களின் நிலையை மேம்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கையை முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார். இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: முதல்வர் ஸ்டாலினின் தொலைநோக்கு பார்வையுடன், சமூக நீதி,சமத்துவம், பெண்களுக்கு அதிகாரம்அளித்தல் போன்றவற்றின் அடிப்படையில் மாநில மகளிர் கொள்கை-2024 உருவாக்கப்பட்டுள்ளது. சமூக நலன், மகளிர்உரிமை துறையால் தயாரிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கையைமுதல்வர் ஸ்டாலின் நேற்று வெளியிட்டார். துறை அமைச்சர் கீதாஜீவன், தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, துறை செயலர் ஜெயஸ்ரீ முரளிதரன், துறை ஆணையர் வே.அமுதவல்லி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.பாலின உணர்திறன் கொண்ட கல்விமுறையை நிறுவுதல், பெண் குழந்தைகளின் கல்வி இடைநிற்றல் விகிதத்தை குறைத்தல், வளர்இளம் பெண்கள், மகளிரின்




ஆரோக்கியம், ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல், வேலைவாய்ப்பில் மகளிர் பங்களிப்பைஅதிகரித்தல், பெண் பணியாளர்களுக்கு பாதுகாப்பான, உகந்த பணியிடங்களை உறுதிசெய்தல், பெண்கள் நிர்வகிக்கும்சிறு தொழில்கள், புதிய தொழில் முயற்சிகளுக்கு ஆதரவு அளித்தல், அதிக ஊதியம் பெறும் வேலைவாய்ப்புகளை பெற டிஜிட்டல் கல்வி அறிவை ஊக்குவித்து, டிஜிட்டல் பாலின இடைவெளியை குறைத்தல், பயிற்சி, திறன் மேம்பாடு மூலம் திறன் இடைவெளியை குறைத்தல், மகளிருக்கு வங்கி கடன் உதவி அதிகம் கிடைக்க வழிவகை செய்தல், மகளிரை அரசியல் களத்தில் பங்கேற்க ஊக்கப்படுத்துதல் ஆகியவை மாநில மகளிர் கொள்கையின் முக்கிய அம்சங்கள் ஆகும்.சமூகநலத் துறை ஒருங்கிணைப்பு துறையாக இருந்து இக்கொள்கையின் செயல்பாட்டை கண்காணிக்கும். இதற்காக, சமூகநலத் துறை இயக்குநரக அலுவலகத்தில் 'செயல்படுத்தல், கண்காணிப்பு அலகு' அமைக்கப்படும்.தலைமைச் செயலர் தலைமையில் உயர்நிலை பெண்கள் உரிமை குழு, சம்பந்தப்பட்ட துறைகளுடன் இணைந்து 6 மாதங்களுக்கு ஒருமுறை கூடி, கொள்கை செயல்பாடு குறித்து ஆய்வு செய்து, இடைக்கால திருத்தங்களை பரிந்துரைக்கும். இதேபோல, ஆட்சியர்கள் தலைமையில், மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழு 2 மாதங்களுக்கு ஒருமுறை இதன் செயலாக்கத்தை கண்காணித்து, எதிர்கொள்ளும் சவால்களை சரிசெய்யும்.சமூகம், பொருளாதாரம், அரசியலில் அதிகார பகிர்வு பற்றி எடுத்துரைப்பதுடன், கல்வி, வேலைவாய்ப்பு, திறன் வளர்ப்பு ஆகியவற்றில் பெண்களின் நிலையை இக்கொள்கை மேம்படுத்தும். பெண்கள் சுயமரியாதையுடன் வாழவும், அவர்களுக்கு பாதுகாப்பான, ஆரோக்கியமான, லட்சியம்நிறைந்த சூழலை உருவாக்கவும் இது ஏதுவாக இருக்கும். நாட்டில் மகளிர் மேம்பாட்டுக்காக தனியான ஒரு கொள்கையை ஒருசிலமாநிலங்களே இதுவரை வெளியிட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் சாதி, வருமான சான்றிதழ் வழங்கும் வசதி: அமைச்சர் அன்பில் மகேஷ் தகவல்

தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் சாதி, வருமானம் மற்றும் இருப்பிட சான்றிதழ் வழங்கும் வசதி ஒரு மாதத்தில் ஏற்படுத்தப்படும் என்று பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறினார்.பள்ளிக்கல்வித் துறை சார்பில், தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழகம் நடத்திய 'பெற்றோர்களைக் கொண்டாடுவோம்' என்ற மாநாடு கோவையில் நடைபெற்றது. தலைமை வகித்துஅமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேசும்போது, 'தமிழக பட்ஜெட்டில் பள்ளிக்கல்வித் துறைக்கு ரூ.44,042 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



திமுக ஆட்சிக்கு வந்தபிறகு பட்ஜெட்டில் பள்ளிக்கல்வித் துறைக்கு மட்டும் ரூ.1,57,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும், அரசுப் பள்ளிமாணவ, மாணவிகள் உயர்கல்வி பயில்வதற்காக மாதம் ரூ.1,000 உதவித்தொகை வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன' என்றார்.பின்னர் அமைச்சர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மாணவர்களுக்கு சாதி, வருமானம் மற்றும் இருப்பிடச் சான்றிதழ்களை பள்ளிகளில் வழங்கும் வசதி ஒரு மாதத்தில் ஏற்படுத்தப்படும். 20 ஆண்டுகளுக்கு முன்பு பள்ளிக்கு நிலம் நன்கொடை அளித்தவர்களை ஊக்கப்படுத்தும் வகையில், அவர்களை கவுரவப்படுத்தி வருகிறோம்.திருப்பூர், நீலகிரி, ஈரோடு, கோவை மாவட்டங்களில் அரசுப்பள்ளிகளுக்கு ரூ.448 கோடி மதிப்பில் நன்கொடை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.நிகழ்ச்சியில், பள்ளிக்கல்வித் துறைச் செயலர் ஜெ.குமரகுருபரன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஸ்வேதா சுமன், பள்ளிக்கல்வி இயக்குநர் க.அறிவொளி, தொடக்கக் கல்வி இயக்குநர் ச.கண்ணப்பன், தமிழ்நாடு மாநிலபெற்றோர் ஆசிரியர் சங்க மாநிலத்துணைத் தலைவர் வி.முத்துக்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.ஆதார் பதிவு தொடக்கம்: கோவை காளப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் 'பயிலும் பள்ளியிலேயே ஆதார் பதிவு' என்ற சிறப்பு முகாமை அமைச்சர் அன்பில் மகேஷ் தொடங்கிவைத்தார்.

தொடர்ந்து, ஆதார் பதிவுச் சான்றுகளை மாணவர்களுக்கு வழங்கிய அவர், 'வரும் மார்ச் 1-ல் பிளஸ் 2 பொதுத் தேர்வு தொடங்குகிறது. மாணவர்கள் படிப்பில் அதிக கவனத்தை செலுத்த வேண்டியது அவசியம். மாணவர்களுக்கு படிப்பில் ஏற்படும் சந்தேகங்கள் குறித்து ஆசிரியர்களிடம் கேட்டு தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். தேர்வுக்கு முதல் நாள் இரவு தூங்காமல், சாப்பிடாமல் தொடர்ந்து படிக்க வேண்டாம். தேர்வு குறித்து பயமோ, பதற்றமோ இருக்கக்கூடாது" என்றார்.

**வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல**

விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவர்க்கு எப்போதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை

அரசியல் செய்திகள்

# 332 ஆய்வக நுட்புனர்களுக்கு பணி நியமன ஆணை: அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்



சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில் மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் மூலம் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 332 ஆய்வக நுட்புனர்களுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் (22.02.2024) பணி நியமன ஆணையினை வழங்கினார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பின்னர் இது குறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது. முதல்வரின் அறிவுறுத்தலோடு கடந்த 6.02.2024 அன்று மருத்துவ பணியாளர் தேர்வாணையம் (MRB) மூலம் 1,021 மருத்துவ பணியிடங்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது. அந்த 1021 மருத்துவர்களும் 15 நாட்கள் கால அவகாசத்துக்குள் பணியில் சேர வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. அந்த வகையில் 90 சதவிகித்திற்கு மேலான மருத்துவர்கள் தற்போது தமது பணியிடங்களுக்குச் சென்று பணியினை மேற்கொண்டிருக்கிறார்கள். அதே போல் கடந்த 11.02.2024 அன்று 977 செவிலியர்களுக்கான பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது. அவர்களுக்கும் 15 நாட்கள் கால அவகாசம் தரப்பட்டது. இதுவரை ஏறத்தாழ 50 சதவிகித செவிலியர்கள் பணியில் சேர்ந்து பணியாற்ற தொடங்கியிருக்கிறார்கள்.

இந்த நிலையில் இந்த துறையில் காலியாக இருக்கிற ஆய்வக நுட்புனர்கள் பணியிடங்கள் 332 நிரப்புவதற்குறிய நடவடிக்கைகளை முதல்வரின் அறிவுறுத்தலோடு மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் அதற்கான அனைத்து பணிகளையும் முடித்து நேற்றைக்கு முன்தினம் அந்த பட்டியல் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநரிடம் தரப்பட்டது. இந்த துறையில் கடந்த 3 நிகழ்வுகளாக 6.02.2024, 11.02.2024 மற்றும் 22.02.2024 ஆகிய நாட்களில் நடைபெற்ற பணி நியமன உத்தரவுகள், இந்தியாவிலேயே முதல்முறையாக புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு கலந்தாய்வு என்கின்ற வகையில் கலந்தாய்வு நடத்தப்பட்டு அவரவர்கள் விரும்புகிற இடங்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டது. அதேபோல் (21.02.2024) ஒரே நாளில் இந்த 332 ஆய்வக நுட்புனர் பணியிடங்களுக்கான கலந்தாய்வு நடத்தப்பட்டு, அவரவர்கள் விரும்புகிற இடங்களுக்கு அவர்கள் தேர்வு செய்து பணி நியமன ஆணைகள் பெற்றிருக்கிறார்கள். தற்போது 332 ஆய்வக நுட்புனர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கியிருக்கிறோம்.

பணி ஆணைகளை பெறும்போது அவரவர் சொந்த பகுதிகளிலேயே பணி ஆணை கிடைத்திருப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்கள். அங்கேயே நாங்கள் பணியாற்றுவதற்கு வாய்ப்புகள் தந்த அரசிற்கு நன்றியினை தெரிவித்தார்கள். இன்னமும் இந்த துறையைப் பொறுத்தவரை பல்வேறு வழக்குகள் நிலுவையில் இருக்கின்ற சூழ்நிலையில் 2,250 கிராம சுகாதார செவிலியர்கள், 986 மருந்தாளுநர்கள், 1066 சுகாதார ஆய்வாளர்கள், மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்கள் 798 ஆக மொத்தம் 5100 பேரை தேர்வு செய்வதற்குரிய பணிகளை மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் (MRB) செய்து கொண்டிருக்கிறது. அப்பணிகளும் இறுதி நிலைக்கு வந்துள்ளது. அந்த வழக்குகளையெல்லாம் நமது துறையின் செயலாளர் அவர்கள் நல்ல தீர்வு காண்பதற்குரிய நடவடிக்கைகளை சட்டபூர்வமாக மேற்கொண்டு வருகிறார்கள்.

தமிழக முதல்வரின் அறிவுறுத்தலோடு, 5100 பணியிடங்களும் எதிர்வரும் ஒரு மாத காலத்திற்குள் நிரப்புவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அதாவது கடந்த 06.02.2024 அன்று 1021 மருத்துவர்களுக்கும், 11.02.2024 அன்று 977 தற்காலிக செவிலியர்களுக்கும், (22.02.2024) 332 ஆய்வக நுட்புனர்கள் என ஏறத்தாழ 2,200க்கும் மேற்பட்ட மருத்துவப் பணியாளர் பணியிடங்கள் கடந்த 20 நாட்களிலேயே நிரப்பப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

# நடப்பு நிதி ஆண்டின் கூடுதல் செலவுக்காக ரூ.30,355 கோடிக்கு இறுதி துணை மதிப்பீடுகள்: பேரவையில் நிதி அமைச்சர் தாக்கல்



சட்டப்பேரவையில், 2023-24 நிதி ஆண்டின் கூடுதல் செலவுக்கான இறுதி துணை மதிப்பீடுகளை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்து பேசியதாவது: பேரவையில் வைக்கப்பட் டுள்ள இறுதிதுணை மதிப்பீடுகள் மொத்தம் ரூ.30,355.32 கோடி நிதிஒதுக்கத்துக்கு வகை செய்கின்றன.

இதில், ரூ.26,590.09 கோடி வருவாய்கணக்கிலும், ரூ.3,499.98 கோடி மூலதன கணக்கிலும், ரூ.265.25 கோடி கடன் கணக்கிலும் அடங்கும். சட்டப்பேரவையில் 2023-24-ம்ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகள் கடந்த 2023 அக்டோபர் 9-ம் தேதி தாக்கல் செய்யப்பட்ட பிறகு, புதிய பணிகள், புதிய துணை பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட செலவினங்களுக்கு பேரவையின் ஒப்புதலை பெறுவது இந்த துணை மதிப்பீடுகளின் முக்கிய நோக்கம்.

குறிப்பாக, எரிசக்தி துறை மானிய கோரிக்கையின்கீழ், தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மான கழகத்துக்கு இழப்பீட்டு நிதியாகரூ.15,593.95 கோடி வழங்கப்பட்டுள்ளது. இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு மானிய கோரிக்கையின்கீழ், மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சென்னை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள குடும்பங்களுக்கு ரொக்க நிவாரண உதவியாக ரூ.1,486.93 கோடி வழங்கப்பட்டுள்ளது. எதிர்பாராத தொடர் மழைப்பொழிவு, வெள்ளப்பெருக்கால் தென் மாவட்டங்களான நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரொக்கநிவாரண உதவியாக ரூ.541.37 கோடி வழங்கப்பட்டுள்ளது.

சிறப்புதிட்ட செயலாக்க துறையின்கீழ் கலைஞர் மகளிர் உரிமைதிட்டத்துக்கு கூடுதல் நிதியாக ரூ.1,055.34 கோடி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து, இறுதி துணை மதிப்பீடுகள் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, குரல் வாக்கெடுப்பு மூலம் மானிய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு, அரசுக்கு கோரிய நிதி ஒதுக்கப்பட்ட தாக அறிவிக்கப்பட்டது.

METRO PEOPLE
WEEKLY MAGAZINE
விளம்பரங்கள்
வரவேற்கப்படுகின்றன உங்கள் விளம்பர தேவைக்கு எங்களை தொடர்பு கொள்ளவும்
75500 01222
73054 62666

மருத்துவ குறிப்புகள்

# மருத்துவ நேரம்
# ஜீவன் மருத்துவமனை (MWC)



Dr. SUVEDHA M.B.B.S
General Physician

Jeevan Hospitals
Holistic Health Care
@ MAHINDRA WORLD CITY, Chennai

CELEBRATING 32 Years of QUALITY HEALTHCARE

## அடிக்கடி படபடப்பு, மூச்சுத் திணறல், நெஞ்சு வலி தெரிந்த அறிகுறிகளும் ! தெரியாத காரணங்களும்!!

★ நம்மில் பலரை பாதிக்கக்கூடிய ஆனால் இதற்கான காரணம் என்னவென்று அறியப்படாத வியாதிகளில் ஒன்று படபடப்பு நோய் (அல்லது) பதட்ட நோய்.

★ இளம் நடுத்தர மற்றும் முதுமை என அனைத்து வயதினர்களிலும் 10 சதவீதம் மக்கள் பாதிக்கப்படுவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இதில் பாதிக்கப்படுபவர்கள் நெஞ்சுவலி, மூச்சுத் திணறல் ஏற்படும்போது மருத்துவமனைக்கு செல்வது, அங்கே பரிசோதனையில் குறிப்பிட்ட பிரச்சினை எதுவும் புலப்படாமல் உடல்நிலை சீராக உள்ளதாக அறிக்கை வருவது, வீட்டிற்கு வந்தால் மீண்டும் அறிகுறிகள் ஏற்படுவது என்று சுழற்சியிலேயே வாழ வேண்டியது வருவது மிகுந்த சங்கடத்திற்குரியது.

## பதட்ட நோய்க்கான பொதுவான அறிகுறிகள்

★ திடீரென்று நெஞ்சு அடைப்பது போலவும் இதயத்துடிப்பு அதிகமாக உள்ளது போலவும் உணர்தல்.

★ மூச்சு திணறல்.

★ மயக்கம் மற்றும் வாந்தி வருவது போன்று உணர்வு ஏற்படுதல்.

★ கை கால்களில் லேசான நடுக்கம் ஏற்படுதல்.

★ உடம்பின் வெப்பநிலை அதிகரிப்பது போல் உணர்தல்.

★ உடம்பு முழுவதும் வியர்த்தல்

★ கை, கால் உணர்வு இல்லாது போல் தோன்றுதல்

★ ஒருவருக்கு தீவிரமான ஆபத்தான சூழலில் ஏற்பட வேண்டிய உடல் வேதியில் மாற்றங்கள் மிகவும் சீரான நிலையில் இருக்கும்போது தூண்டப்படுவதே இந்த பதட்ட நோய் நம் உடலை இயக்கும் விதத்தில் முக்கியமான காரணமாக உள்ளது.

## தடுக்கும் பாதுகாக்கும் வழிமுறைகள்

★ நெஞ்சு வலி ஏற்பட்ட பின்பு இதய பிரச்சினைகள் சீராக உள்ளது என்று தெரிந்து கொண்ட பின் மீண்டும் மீண்டும் அறிகுறிகள் தோன்றினால் மனநல மருத்துவரை அணுகுதல்.

★ நம் உடல் நிலை குறித்து கவலை கொள்ளாமல் நேர்மறையான எண்ணங்களை வளர்த்துக் கொள்ளுதல்.

★ காப்பி குடிப்பதை தவிர்த்தல்,நடைப்பயிற்சி மற்றும் சீரான உடற்பயிற்சி மேற்கொள்ளுதல்,முறையான சுவாச பயிற்சி செய்தல்.

★ நேரத்திற்கு உணவு உண்பது இரவில் ஆறு மணி நேரத்திலிருந்து எட்டு மணி நேரம் தூங்குவது புத்தகங்கள் படிப்பது போன்ற ஆரோக்கியமான பழக்கவழக்கங்களை கடைபிடிப்பதன் மூலம் இந்த நோயின் தீவிரத்தில் இருந்து விடுபட்டு வாழ இயலும்.

**தொழில்நுட்பச் செய்திகள்**

## இந்தியாவில் 'நத்திங் போன் (2a)' உற்பத்தி – சிஇஓ சூசகம்



வரும் மார்ச் 5-ம் தேதி நத்திங் நிறுவனம் 'நத்திங் போன் (2a)' ஸ்மார்ட்போனை இந்தியா உட்பட உலக சந்தையில் அறிமுகம் செய்ய உள்ளது. இந்நிலையில், இந்த போனை இந்தியாவில் உற்பத்தி செய்ய உள்ளதாக அந்நிறுவனத்தின் சிஇஓ தெரிவித்துள்ளார். லண்டனை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது நத்திங் நிறுவனம். தொழில்நுட்ப சாதன உற்பத்தி நிறுவனமான நத்திங், ஹெட்செட் விற்பனை மூலம் சந்தையில் களம் கண்டது. தொடர்ந்து ஸ்மார்ட்போன் விற்பனையை 2022-ம் ஆண்டின் ஜூலை மாதம் தொடங்கியது. இது ஸ்மார்ட்போன் ஆர்வலர்கள் மத்தியில் வரவேற்பை பெற்றது. அதற்கு காரணம் இந்நிறுவனத்தின் நிறுவனரும், சிஇஓ-வுமான கார்ல் பெய். இவர் ஒன்பிளஸ் நிறுவனத்தின் இணை நிறுவனராக செயல்பட்டவர். பின்னர் கடந்த 2021-இல் நத்திங் நிறுவனத்தை தொடங்கினார். இதுவரை நத்திங் போன் (1), நத்திங் போன் (2) சந்தையில் வெளியிட்டுள்ளது. விரைவில் நத்திங் போன் (2a) ஸ்மார்ட்போனை அறிமுகம் செய்ய உள்ளது. இது நத்திங் போன் (1)-ன் மேம்படுத்தப்பட்ட வெர்ஷனாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. விலையும் அதிகம் இருக்காது என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் உள்ள மொபைல் போன் பயனர்களை டார்கெட் செய்து ரூ.30,000-க்கும் குறைவான விலையில் இந்த போன் விற்பனைக்கு வரும் என தெரிகிறது. எக்ஸ் தளத்தில் இது குறித்து பயனர் எழுப்பிய கேள்விக்கு, 'ஆம்' என அறிவித்துள்ளார். அதோடு தனது எக்ஸ் தள பெயரை 'Carl Bhai' என அவர் மாற்றியுள்ளார். இந்தியில் Bhai என்றால் சகோதரர் என அர்த்தம். பல்வேறு மொபைல் போன் நிறுவனங்கள் இந்தியாவில் போன்களை உற்பத்தி செய்ய ஆர்வம் செலுத்தி வருகின்றன. நத்திங் நிறுவனமும் சென்னையில் உற்பத்தி கூடத்தை கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## போன் பே–வின் Indus Appstore அறிமுகம்: கூகுள் பிளே ஸ்டோருக்கு போட்டி



போன் பே நிறுவனம் Indus Appstore எனும் ஆப் ஸ்டோரினை பயனர்களுக்காக அறிமுகம் செய்துள்ளது. இதில் சுமார் 2 லட்சம் செயலிகள் இடம் பெற்றுள்ளது. 12 இந்திய மொழிகளில் இயங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கூகுளின் பிளே ஸ்டோருக்கு போட்டியாக இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் யுபிஐ மூலம் பணம் அனுப்ப மற்றும் பெற மட்டுமல்லாது கூடுதலாக பல்வேறு சேவைகளை இணையவழியில் வழங்கி வருகின்றன ஃபின்டெக் நிறுவனங்கள். அந்த வகையில் போன்பே நிறுவனம் பல்வேறு சேவைகளை வழங்கி வருகிறது. சினிமா டிக்கெட், ரயில், பேருந்து, விமான டிக்கெட், விடுதி முன்பதிவு, காப்பீடு, ரீசார்ஜ் மற்றும் பில் பேமெண்ட் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை பயனர்கள் இதில் பெற்று வருகின்றனர். இந்த சூழலில் Indus Appstore அறிமுகமாகி உள்ளது. கடந்த ஆண்டு இது குறித்த பேச்சு வெளிவந்தது. போன் பே செயலியை பயனர்கள் அப்டேட் செய்தால் இந்த ஆப் ஸ்டோரை பயனர்கள் தங்கள் போனில் இன்ஸ்டால் செய்வதற்கான லிங்கை பெறலாம். அதை பயன்படுத்தி ஆப் ஸ்டோரை டவுன்லோட் செய்து இன்ஸ்டால் செய்து பயன்படுத்தலாம். Indus Appstore-னை இன்ஸ்டால் செய்ததும் பயனர்கள் தங்களது விருப்ப மொழியை தேர்வு செய்ய வேண்டும். தமிழ், ஆங்கிலம் உட்பட 12 மொழிகளில் இந்த செயலியை பயனர்கள் பயன்படுத்தலாம். தொடர்ந்து மொபைல் எண்ணை உள்ளிட்டு, ஓடிபி சரிபார்ப்பு மேற்கொண்ட பின்னர் செயலியை பயன்படுத்தலாம். சமூக வலைதள செயலிகள் தொடங்கி மேட்ரிமோனி, நிதி, வணிகம், ஹெல்த், கல்வி, பொழுதுபோக்கு, செய்தி, கேம்ஸ், பயணம் என சுமார் 45 வகையிலான செயலிகளை பயனர்கள் இதில் பெற முடியும். கிட்டத்தட்ட கூகுள் பிளே ஸ்டோர் போலவே இதன் இயக்கம் உள்ளது. பயனர் அனுபவம் எளிதான வகையில் இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் லோன் ஆப் மோசடி விவகாரத்தில் இதன் பாதுகாப்பு தன்மை குறித்த விவரம் அடுத்தடுத்த நாட்களில் தெரியவரும். இதில் தங்கள் செயலிகளை லிஸ்ட் செய்ய டெவலப்பர்களுக்கு ஓராண்டு காலத்துக்கு கட்டணம் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மொபைல் ஆப் மார்க்கெட் தளத்தில் தங்களது இந்த முயற்சி ஆரோக்கியமான போட்டிக்கு வழிவகுக்கும் என போன் பே நிறுவன சிஇஓ சமீர் நிகம் தெரிவித்துள்ளார். ஸ்மார்ட்போன் நிறுவனங்களுடன் இணைந்து இதனை மொபைல் இன்-பில்ட் செயலியாக கொண்டு வரும் திட்டத்தையும் போன் பே முன்னெடுத்துள்ளதாக தகவல்.

## உங்கள் வீடு தேடி மருத்துவர் வர 'வா தல' புதிய செல்போன் செயலி அறிமுகம்

சென்னையைச் சேர்ந்த ஹெல்த் டெக் ஸ்டார்ட் அப் நிறுவனமான முனியா டெக்னாலஜிஸ் (Muniah Technologies), 'வா தல' இணையதளம் (Va Thala Web) மற்றும் 'வா தல' செல்போன் செயலி (Va Thala Mobile App) ஆகியவற்றை அறிமுகப்படுத்தி உள்ளது. மத்திய அரசின் முன்னாள் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை செயலர், பத்ம பூஷன் விருதுபெற்ற டாக்டர் டி. இராமசாமி, அண்மையில் இதை அறிமுகப்படுத்தினார். இது, மருத்துவம் சார்ந்த சுகாதார சேவையை நாடும் நோயாளிகளுடன் உரிமம் பெற்ற மருத்துவர்கள், பிசியோதெரபிஸ்ட்கள், செவிலியர்களை இணைக்கிறது. இந்த செயலியில் மருத்துவர்கள் இலவசமாகப் பதிவு செய்து கொள்ளலாம். உரிமம் பெற்ற கால்நடை மருத்துவர்கள், யோகா ஆசிரியர்களும் இதில் இணையலாம். நோயாளிகள், குறிப்பாக முதியவர்கள் மற்றும் நாட்பட்ட நோய்கள் உள்ளவர்கள், 5 முதல்10 கி.மீ. சுற்றளவில் உள்ள தகுதிவாய்ந்த சுகாதார நிபுணர்களிடமிருந்து வீட்டிலிருந்தே சுகாதார சேவைகளைப் பெற இந்த செயலி உதவுகிறது. அத்துடன் மருத்துவமனைக்கு பயணம் செய்தல், நீண்ட காத்திருப்பு நேரம், மருத்துவமனை செல்வதால் ஏற்படும் தொற்றுநோய் அபாயங்கள் உள்ளிட்டவற்றை தவிர்க்க உதவுகிறது. இதுகுறித்து 'வா தல' செயலியின் தலைமை நிர்வாக அதிகாரி நவீத் அகமது கூறியதாவது: எங்களுடைய தொழில்நுட்பமானது சமீபத்திய ஜி.பி.எஸ், ஏ.ஐ. தொழில்நுட்பத்துடன் இணக்கமாகச் செயல்படுகிறது. இது சுகாதார நிபுணர்கள், அருகில் வசிக்கும்நோயாளிகளுக்கு மதிப்பை உருவாக்குகிறது. எங்கள் தளத்தின் மூலம், தங்களின் அனுபவ காலம், தகுதி மற்றும் சேவைகளை வெளிப்படுத்துவதற்கு இணையவழி சுயவிவரத்தை மருத்துவர்கள் உருவாக்கலாம். மேலும் ஓய்வாக உள்ள நேரத்தில் நோயாளிகளை சந்திப்பதற்கான கோரிக்கைகளைப் பரிசீலிக்கலாம். மருத்துவர்கள் தாங்களே ஆலோசனைக் கட்டணங்களை நிர்ணயித்துக் கொள்ளலாம். சுருக்கமாக, 'வா தல' செயலி மூலம் தங்கள் வேலை நேரம் அல்லது ஓய்வு நேரத்தில் தன்னிச்சையாக சேவை வழங்கி மருத்துவர்கள் வருவாய் பெற முடியும். இருப்பிடம், நிபுணத்துவம், பாலினம், மொழி, கிடைக்கும் நேரம், பிற நோயாளிகளிடமிருந்து மதிப்புரைகள் ஆகியவற்றின் அடிப்படையில் உரிமம் பெற்ற மருத்துவர்களை நோயாளிகள் தேடலாம். மேலும் உடனடியாக வீட்டுக்கு வருகை தருதல் அல்லது கிளினிக் வருகைகளையும் அவர்கள் திட்டமிடலாம். காய்ச்சல் மற்றும் நீரிழிவு கால் புண்களுக்கான மருந்து கட்டுதல் போன்ற முக்கியமான அல்லது அவசரமற்ற உடல்நலப் பிரச்சினைகளுக்கு இந்த சேவைகளைப் பெறலாம். தங்கள் மருத்துவப் பின்னணி, மருந்துச் சீட்டுகள், ஆய்வக அறிக்கைகள் ஆகியவற்றை இணைய வழியில் நோயாளிகள் நிர்வகிக்கலாம். அத்துடன் உடனடியாக மருத்துவர்களுடன் தகவலைப் பகிர்ந்து கொள்ளவும் முடியும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## சினிமா செய்திகள்

# ஹிப்ஹாப் ஆதியின் 'பி.டி.சார்' படப்பிடிப்பு நிறைவு



நடிகர் ஹிப்ஹாப் ஆதி நடித்து வந்த 'பி.டி.சார்' படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. நெஞ்சமுண்டு நேர்மையுண்டு ஒடு ராஜா' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமான கார்த்திக் வேணுகோபாலன், அடுத்து ஹிப் ஹாப் ஆதி நடிக்கும் படத்தை இயக்கி வருகிறார். ஐசரி கணேஷின் வேல்ஸ் ஃபிலிம் இன்டர்நேஷனல் தயாரிக்கும் இந்தப் படத்துக்கு 'பி.டி.சார்' என்று தலைப்பு வைத்துள்ளனர். கஷ்மிரா பர்தேசி நாயகியாக நடிக்கிறார். அனிகா சுரேந்திரன், பிரபு, முனீஷ்காந்த், பாண்டியராஜன், இளவரசு, தியாகராஜன் உட்பட பலர் நடித்துள்ளனர். மாதேஷ் மாணிக்கம் ஒளிப்பதிவு செய்யும் இந்தப் படத்துக்கு, ஹிப்ஹாப் ஆதி இசையமைக்கிறார். விளையாட்டுத் துறை ஆசிரியரின் வாழ்வியலைப் பேசுகிறதாம் இந்தப் படம். இந்நிலையில், இப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. முன்னதாக ஹிப்ஹாப் ஆதி நடிப்பில் வெளியான 'வீரன்' படம் கலவையான விமர்சனங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

# சிவ.கா, தனுஷ் பட இயக்குநருடன் கைகோத்த லெஜண்ட் சரவணன்





தி லெஜண்ட்' படத்தில் நடித்ததன் மூலம் திரையுலகில் நாயகனாக அறிமுகம் ஆனவர் தொழிலதிபர் அருள் சரவணன். அவரது அடுத்த படத்தை துரை செந்தில்குமார் இயக்குவதாக தகவல் வெளியாகியுள்ளது. 'எதிர்நீச்சல்', 'காக்கிச் சட்டை', 'கொடி', 'பட்டாசு' படங்களை இயக்கிய துரை செந்தில்குமார் தற்போது சூரி நடிப்பில் உருவாகி வரும் 'கருடன்' படத்தை இயக்கி முடித்துள்ளார். இதையடுத்து அவர் லெஜண்ட் சரவணனை வைத்து புதிய படம் ஒன்றை இயக்குகிறார். இப்படத்தின் பணிகள் ஏப்ரல் மாதம் தொடங்க உள்ளதாக கூறப்படுகிறது. 'கொடி' படத்துக்கு ஒளிப்பதிவு செய்த வெங்கடேஷ் இந்தப் படத்துக்கும் ஒளிப்பதிவு செய்ய உள்ளதாகவும், ஜிப்ரான் இசையமைப்பார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என தெரிகிறது. ஜேடி - ஜெர்ரி இயக்கத்தில் கடந்த 2022-ம் ஆண்டு வெளியான படம் 'தி லெஜண்ட்'. இந்தப்படத்தில் அருள் சரவணன், விவேக், நாசர், சுமன் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைத்திருந்தார். இப்படம் எதிர்மறை விமர்சனங்களைப் பெற்றது. இந்நிலையில், தற்போது தனது இரண்டாம் படத்தில் அருள் சரவணன் நடிக்க உள்ளது குறிப்பிடத்தக்கது.


# 100+ திரையரங்குகளில் ஜீவாவின் 'கோ' படம் ரீ-ரிலீஸ்



ஜீவா நடித்த 'கோ' திரைப்படம் மார்ச் 1-ம் தேதி தமிழகம், கேரளா, கர்நாடகாவில் உள்ள 100-க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் ரீ-ரிலீஸ் செய்யப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2011-ம் ஆண்டு ஆர்.எஸ்.இன்ஃபோடெயின்ட்மென்ட் சார்பில் எல்ரெட் குமார் தயாரித்த 'கோ' படத்தை கே.வி.ஆனந்த் இயக்கியிருந்தார். இதில் ஜீவா, கார்த்திகா, அஜ்மல், பியா பாஜ்பாய், பிரகாஷ் ராஜ், கோட்டா சீனிவாச ராவ், போஸ் வெங்கட், ஜெகன் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். ஹாரிஸ் ஜெயராஜ் படத்துக்கு இசையமைத்திருந்தார். ரூ.20 கோடி பட்ஜெட்டில் உருவான இப்படம் ரூ.50 கோடியை வசூலித்தது. அரசியல் கலந்த ஆக்ஷன் த்ரில்லரில் உருவானது இப்படம். மக்களவைத் தேர்தல் வர உள்ள சூழலில், இப்படம் வரும் மார்ச் 1-ம் தேதி மீண்டும் திரையரங்குகளில் ரீ-ரிலீஸ் செய்யப்பட உள்ளது. இது தொடர்பாக படத்தின் தயாரிப்பாளர் எல்ரெட் குமார் கூறுகையில்,

நாங்கள் தயாரித்தப் படங்களில் 'கோ' எங்களுக்கு வெற்றிகரமான படைப்பு. இந்தத் திரைப்படத்தின் வெற்றி எங்களுக்கு விவரிக்க முடியாத மனநிறைவையும் தந்தது. பார்வையாளர்கள் அதை சினிமாவுக்கு அப்பாற்பட்ட ஒன்றாகக் கொண்டாடினர். இது வெளியாகி பத்து வருடங்களுக்கும் மேலாகிறது. ஆனால் மறைந்த இயக்குநர் கே.வி.ஆனந்தின் மேஜிக், ஜீவா, அஜ்மல் ஆகியோரின் அபாரமான நடிப்பு மற்றும் இசையமைப்பாளர் ஹாரிஸ் ஜெயராஜின் அற்புதமான இசையால் படம் இன்றும் சோர்வு ஏற்படுத்தாமல் ரசிக்கக்கூடிய ஒன்றாகவே இருக்கிறது. சரியான கதையை பொறுப்போடு பார்வையாளர்களுக்குக் கொண்டு சென்றதால்தான் இந்தப் படம் வெற்றிப் பெற்றது. இப்போது, தற்போதைய தலைமுறை இளைஞர்களுக்காக இந்தப் படத்தை மீண்டும் வெளியிடுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். மார்ச் 1, 2024 அன்று தமிழகம், கேரளா மற்றும் கர்நாடகா முழுவதும் 100-க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் படத்தை மீண்டும் வெளியிடவுள்ளோம். படத்தின் இயக்குநர் கே.வி.ஆனந்த் நம்மோடு இல்லாத இந்த சமயத்தில் இந்தப் படத்தை மீண்டும் வெளியிடுவது ஆர் எஸ் இன்ஃபோடெயின்மென்ட் மற்றும் படக்குழுவினர் என அனைவருக்கும் எமோஷனலான தருணம் இது என்றார்.

# 'வடக்கன்' இன்றைய காலத்துக்கு தேவையான படம்: பாஸ்கர் சக்தி



எழுத்தாளர் பாஸ்கர் சக்தி, இயக்குநராக அறிமுகமாகும் படம், 'வடக்கன்'. குங்குமராஜ், வைரமாலா, பர்வேஸ் மெஹ்ரூ, சமிரா உட்பட பலர் நடித்துள்ளனர்.

டிஸ்கவரி சினிமாஸ் சார்பில் மு.வேடியப்பன் தயாரிக்கும் இந்தப் படத்துக்குத் தேனி ஈஸ்வர் ஒளிப்பதிவு செய்துள்ளார். எஸ்.ஜே.ஜனனி இசை அமைத்துள்ளார்.

ரமேஷ் வைத்யா பாடல்கள் எழுதியுள்ளார். படம் பற்றி பாஸ்கர் சக்தி கூறியதாவது: வெண்ணிலா கபடி குழு, எம்டன் மகன், நான் மகான் அல்ல உட்பட சுமார் 10 படங்களுக்கு வசனம் எழுதியிருக்கிறேன். அழகர்சாமியின் குதிரை படத்துக்குக் கதை, வசனம் எழுதி இருக்கிறேன்.

'வடக்கன்' மூலம் இயக்குநர் ஆகிறேன். வடமாநில தொழிலாளர்கள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் பணியாற்றுகிறார்கள். கிராமங்களில் கூட வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பற்றிய ஒரு பார்வை எல்லோருக்கும் இருக்கிறது. சமூகத்தில் இது பற்றிய வாதப்பிரதிவாதங்கள் எழுந்த வண்ணம் இருக்கின்றன.

அதை அரசியலாக இல்லாமல் பொழுதுபோக்காகவும் நகைச்சுவையாகவும் இதில் சொல்லியிருக்கிறேன். அதாவது ஒரு சமூகப் பிரச்சினையை, எளிய மனிதர்களின் பார்வை வழியாக அலசும் படம் இது.

இன்றைய காலகட்டத்துக்கு அவசியமான படம் என்று கருதுகிறேன். தேனி பின்னணியில் உருவாகி இருக்கும் இந்தப் படம் முழுவதும் லைவ் ரெக்கார்டிங் செய்திருக்கிறோம்.

பத்திரிகையாளர் ரமேஷ் வைத்யா இதில் நடிகராக அறிமுகமாகிறார். படப்பிடிப்பு முடிந்துவிட்டது. இவ்வாறு பாஸ்கர் சக்தி கூறினார்.

விளையாட்டு செய்திகள்

# 215 ரன்கள் விளாசியும் நியூஸி. தோல்வி: கடைசி பந்தில் ஆஸி. த்ரில் வெற்றி




வெலிங்டனில் நியூஸிலாந்து - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையே நடைபெற்ற முதல் டி20 போட்டியில் நியூஸிலாந்து அணி 20 ஓவர்களில் 215 ரன்கள் விளாசியும் ஆஸ்திரேலிய அதிரடியில் கடைசி பந்தில் தோல்வி கண்டது. கடைசி ஓவரில் 16 ரன்கள் தேவைப்பட்டது. டிம் சவுதி வீசிய 20-வது ஓவரில் முதல் 3 பந்துகளில் 4 ரன்களே வந்தன. ஆனால் 4வது பந்து யார்க்கர் வீசும் முயற்சியில் லெக் ஸ்டம்ப் ஃபுல் டாஸாக, டிம் டேவிட் அதனை பவுண்டரிக்கு வெளியே சிக்சருக்கு தூக்கினார். 5வது பந்து யார்க்கர் சரியாக விழுந்தாலும் டிம் டேவிட் ஃப் கவரில் தட்டி விட்டு 2 ரன்கள் ஓடினார். கடைசி பந்து வெற்றிக்கு 4 ரன்கள் தேவை. கடைசி பந்தும் யார்க்கர் மிஸ் ஆக டிம் டேவிட் அதை அசுரத்தனமாக அடிக்க லெக் திசை பவுண்டரி அருகே பிலிப்ஸ் முழு வீச்சு டைவ் அடித்தும் பந்து பவுண்டரியைக் கடக்க ஆஸ்திரேலியா த்ரில் வெற்றி பெற்றது.

# ஐபிஎல் தொடரை தவறவிடும் முகமது ஷமி




காயம் காரணமாக அவதிப்பட்டு வரும் இந்திய கிரிக்கெட் வீரர் முகமது ஷமி வரவிருக்கும் ஐபிஎல் தொடரில் இருந்து விலகலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது. இந்திய கிரிக்கெட் வீரர் முகமது ஷமி தற்போது நடைபெற்று வரும் இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் இடது கணுக்கால் காயம் காரணமாக விளையாடவில்லை. கடந்த ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற ஒருநாள் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் அதிக விக்கெட் வீழ்த்திய பவுலராக ஜொலித்தவர் ஷமி. 7 போட்டிகளில் விளையாடி 24 விக்கெட்களை அவர் கைப்பற்றி இருந்தார். இதில் 3 போட்டிகளில் 5+ விக்கெட்களை கைப்பற்றி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. நியூஸிலாந்து அணிக்கு எதிரான அரை இறுதிப் போட்டியில் 7 விக்கெட்களை கைப்பற்றி இந்திய அணி இறுதிப் போட்டிக்கு முன்னேற உதவினார். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் கடைசியாக இந்தியாவுக்காக விளையாடி இருந்தார் ஷமி. அதன்பின் இடது கணுக்கால் காயத்துக்கு சிகிச்சை பெற்றுவருகிறார். ஜனவரி கடைசி வாரத்தில் லண்டனில் சிகிச்சை எடுத்த ஷமிக்கு ஊசி ஒன்று செலுத்தப் பட்டதாகவும் அதன்பின் அவரால் சிறிது ஓட முடிந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் தற்போது மீண்டும் அவரது காயம் கவலைக்குரிய வகையில் இருப்பதால் இம்முறை அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக பிசிசிஐ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். மேலும், 'அடுத்தகட்டம் அறுவை சிகிச்சையே. விரைவில் அறுவை சிகிச்சைக்காக ஷமி இங்கிலாந்துக்கு செல்லலாம். எனவே, ஐபிஎல் தொடரில் இந்த முறை அவர் ஆடுவது கேள்விக்குறியே.' என்று அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

# மார்ச் 22 முதல் போட்டியில் சென்னை Vs பெங்களூரு ஐபிஎல் 2024 அட்டவணை வெளியீடு



2024 ஐபிஎல் தொடருக்கான கால அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மார்ச் 22-ம் தேதி தொடங்கும் முதல் ஐபிஎல் போட்டியில் சென்னையை எதிர்கொள்கிறது பெங்களூரு. ஐபிஎல் டி20 கிரிக்கெட் தொடரின் 17-வது சீசனுக்கான போட்டி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. முதல் 21 போட்டிகளுக்கான கால அட்டவணை மட்டும் வெளியிடப்பட்டுள்ளது. வரும் ஏப்ரல், மே மாதங்களில் பொதுத் தேர்தல் நடைபெறக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த காலக்கட்டங்களில் தான் ஐபிஎல் டி 20 தொடரின் போட்டிகளை நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஐபிஎல் அட்டவணை முழுவதுமாக அறிவிக்கப்படாமல், மார்ச் 22 - ஏப்ரல் 7ம் தேதி வரை நடக்கும் 21 போட்டிகளுக்கான கால அட்டவணை மட்டும் வெளியிடப்பட்டுள்ளது. தேர்தல் தேதி அறிவிப்புக்கு பின் முழு அட்டவணையும் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, வரும் மார்ச் 22-ம் தேதி தொடங்கும் முதல் ஐபிஎல் போட்டியில் சென்னையை எதிர்கொள்கிறது பெங்களூரு. இந்தப் போட்டி சென்னை சேப்பாக்கத்தில் நடக்கிறது. மார்ச் 23-ம் தேதி நடக்கும் முதல் ஆட்டத்தில் பஞ்சாப் - டெல்லி அணிகளும், இரண்டாவது ஆட்டத்தில் கொல்கத்தா - ஹைதராபாத் அணிகளும் மோதுகின்றன. மார்ச் 24-ம் தேதி நடக்கும் முதல் ஆட்டத்தில் ராஜஸ்தான் - லக்னோ அணிகளும், இரண்டாவது ஆட்டத்தில் குஜராத் - மும்பை அணிகளும் மோதுகின்றன.

# ரஞ்சி கோப்பை கால் இறுதி ஆட்டத்தில் சவுராஷ்டிராவை 183 ரன்னில் சுருட்டியது தமிழக அணி



ரஞ்சி கோப்பை கிரிக்கெட் தொடரின் கால் இறுதி ஆட்டத்தில் சவுராஷ்டிராவை 183 ரன்களுக்கு ஆட்டமிழக்கச் செய்தது தமிழக அணி. கோவையில் நேற்று தொடங்கிய இந்த ஆட்டத்தில் முதலில் பேட் செய்த சவுராஷ்டிரா அணியானது சாய் கிஷோர், அஜித் ராம் ஆகியோரது சிறப்பான பந்து வீச்சில் 77.1 ஓவரில் 183 ரன்களுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக தொடக்க வீரரான ஹார்விக் தேசாய் 185 பந்துகளில், ஒரு சிக்ஸர், 10 பவுண்டரிகளுடன் 83 ரன்கள் சேர்த்தார். கெவின் ஜிவ்ரஜனி 0, ஷெல்டன் ஜாக்சன் 22, சேதேஷ்வர் புஜாரா2, அர்பித் வசவதா 25, தர்மேந்திரசிங் ஜடேஜா 0, ஷிராக் ஜானி 0, பார்த் பூட் 13, ஜெயதேவ் உனத்கட் 1, யுவராஜ்சிங் தோடியா 0 ரன்களில் நடையை கட்டினர். பிரேரக் மன்கட் 35 ரன்கள் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார். தமிழக அணி தரப்பில் சாய் கிஷோர் 5, அஜித் ராம் 3, சந்தீப் வாரியர் 2 விக்கெட்கள் வீழ்த்தினர். இதையடுத்து விளையாடிய தமிழக அணி முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் 10 ஓவர்களில் ஒருவிக்கெட் இழப்புக்கு 23 ரன்கள் எடுத்தது.

விமல் குமார் 5 ரன்களில் ஷிராக் ஜானி பந்தில் போல்டானார். நாராயண் ஜெகதீசன் 12, சாய் கிஷோர் 6 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். கைவசம் 9 விக்கெட்கள் இருக்க 160 ரன்கள் பின்தங்கிய நிலையில் இன்று 2-வது நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடுகிறது தமிழக அணி.

# சென்னீர்குப்பம் நடுநிலைப் பள்ளியின் 51ஆம் ஆண்டு விழா










சென்னீர்குப்பம் வடக்கு பகுதியில் அமைந்துள்ள நடுநிலைப் பள்ளியின் 51ஆம் ஆண்டு விழா கோலாகலமாக நடைபெற்றது.தமிழக வாகன ஓட்டுனர்கள் மற்றும் தொழிலாளர்கள் நல சங்கத்தின் நிறுவனத் தலைவர் டாக்டர் **சுகுமார் பாலகிருஷ்ணன்** அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கு பெற்று கல்வியில் சிறந்து விளங்கும் மாணவ மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கி விழாவினை சிறப்பித்தார். மேலும் மாணவ மாணவியர்களுக்கு கல்வியில் சிறந்து விளங்கும் அறிவுரைகளை வழங்கினார்

Ab India karega claim zindagi ko



Max Bupa's new avatar, Niva Bupa brings in a new era for India. An era in which health insurance is not merely a tool to help you with your claims in the event of injury and hospitalisation. Instead, it's what sets you free. Free to claim the assurance of good health. Free to claim the confidence to step out and do the things you dream of. With its unmatched benefits like **30 minutes cashless claim processing, digital claim reimbursement and a network of over 7600 hospitals²**, Niva Bupa will give you the freedom to claim the countless magical moments that life has to offer.

INTRODUCING
Bupa
niva
Health Insurance

Say 'Hi' to us on WhatsApp: 9811956696 | Helpline: 1860-500-1000 | Website: www.nivabupa.com

## உலக செய்திகள்

# கடந்த 2023-ம் ஆண்டில் துபாய் விமான நிலையம் சென்ற பயணிகளில் 1.19 கோடி பேருடன் இந்தியர்கள் முதலிடம்



துபாய் விமான நிலையத்துக்கு கடந்த 2023-ம் ஆண்டில் 8 கோடியே 69 லட்சம் பேர் வந்துள்ளனர். இவர்களில் இந்தியர்கள் 1 கோடி 19 லட்சம் பேர் என துபாய் விமானநிலையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது. துபாய் விமான நிலையத்திலிருந்து 104 நாடுகளில் உள்ள 262 நகரங்களுக்கு 102 விமான நிறுவனங்கள் மூலம் செல்ல முடியும். இதனால் கடந்தாண்டில் துபாய் விமான நிலையத்துக்கு வந்த பயணிகளின் எண்ணிக்கை 8 கோடியே 69 லட்சமாக அதிகரித்துள்ளது. இவர்களில் இந்தியாவில் இருந்து 1 கோடியே 19 லட்சம்பேர் வந்ததால், வெளிநாட்டு பயணிகளின் வருகையில் இந்தியா முதலிடத்தில் உள்ளதாக தெரவிக்கப்பட்டுள்ளது.

67 லட்சம் பேருடன் சவுதி அரேபியா 2-வது இடத்திலும், 59 லட்சம் பேருடன் இங்கிலாந்து 3-வது இடத்திலும் உள்ளன. வெளிநாட்டு பயணத்துக்கு துபாய் சர்வதேச விமான நிலையம்மிகவும் பரபரப்பான விமான நிலையமாக உள்ளது.

இதனால் துபாய் வழியாக வேறு நாடுகளுக்கு செல்லும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த 4-வது காலாண்டில் டிசம்பர் மாதத்தில் அதிகளவாக 78 லட்சம் பேர் சென்றுள்ளனர். அதேபோல் கடந்தாண்டில் விமான பயணிகளின் 7 கோடியே 75 லட்சம் பைகளையும் துபாய் விமான நிலையம் கையாண்டுள்ளது.

இதன் வெற்றி சதவீதம் 99.8 சதவீதம். 1000 பயணிகளில் இருவர் மட்டுமே தங்கள் பைகளை மாற்றி எடுத்துச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலக அளவில் சிறந்த மையம்:
இங்கு பாஸ்போர்ட் சரிபார்க்க 7 நிமிடங்களுக்கும் குறைவாகவே ஆவதாக 95 சதவீத பயணிகள் தெரிவித்துள்ளனர். பாதுகாப்பு சோதனை 4 நிமிடங்களுக்கு குறைவாக உள்ளது. விமான நிலைய சேவையில், துபாய் விமான நிலையம் உலகளவில் சிறந்த மையமாக உள்ளது.

# லாட்டரியில் ரூ.2,800 கோடி வென்றவருக்கு பணம் தர மறுப்பு: தவறுதலாக இடம்பெற்றதாக விளக்கம்




அமெரிக்காவின் வாஷிங்டனைச் சேர்ந்த ஜான் சீக்ஸ் கடந்த ஜனவரி 6-ம் தேதி பவர்பால் லாட்டரி சீட்டை வாங்கினார். அவர் வாங்கிய லாட்டரி சீட்டுக்கு 340 மில்லியன் டாலர் (ரூ.2,800 கோடி) பரிசு விழுந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. லாட்டரி நிறுவனத்தின் இணைய தளத்தில் சென்றுஅந்தத் தகவலை உறுதிபடுத்திக்கொண்டார் ஜான்சீக்ஸ். இதையடுத்து லாட்டரி அலுவலகத்தில் தன்னுடைய லாட்டரி சீட்டைக் கொடுத்து, பரிசுத் தொகையை கேட்டுள்ளார். ஆனால், அவருக்கு பரிசு வழங்க அந்நிறுவனம் மறுத்தது. அந்த நிறுவனத்தைச் சேர்ந்த முகவர் ஒருவர், ஜான் சீக்ஸிடம், உங்கள் எண்ணுக்கு லாட்டரி விழவில்லை. தவறுதலாக உங்கள் எண் குறிப்பிடப்பட்டுவிட்டது. உங்கள் லாட்டரி சீட்டை குப்பையில் போடுங்கள். இனி அது பயனற்றது என்று கூறியுள்ளார். இதனால், ஜான் சீக்ஸ் மிகுந்த அதிர்ச்சிக்கு உள்ளானார். இதையடுத்து தற்போது அந்த லாட்டரி நிறுவனத்துக்கு எதிராக நீதிமன்றத்தை நாடியுள்ளார். இது குறித்து அவரது வழக்கறிஞர் கூறுகையில், லாட்டரி நிறுவனத்தின் செயல்பாடு அதன் நம்பகத்தன்மை மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. ஜான் சீக்ஸுக்கு அறிவிக்கப்பட்ட தொகையை அந்நிறுவனம் வழங்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் கோரியுள்ளோம் என்று தெரிவித்துள்ளார்.

# ரூ.2,650-க்கு சாப்பிட்ட நபர் ரூ.8.30 லட்சம் டிப்ஸ் வழங்கினார்: அமெரிக்க உணவகத்தில் சுவாரஸ்யம்




அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணத்தில் அமைந்திருக்கிறது 'தி மேசன் ஜார் கஃபே'. இந்த உணவகத்துக்கு சில நாட்களுக்கு முன்பு மார்க் என்பவர், காலை உணவு சாப்பிட வந்துள்ளார். அவர் சாப்பிட்டதற்கான தொகை 32 டாலர் (ரூ.2,650). இதற்கான பில்லை அவரது மேஜையில் பணியாளர் வைத்துச் சென்றுள்ளார். சில நிமிடம் கழித்து வந்து அந்த பில்லை எடுத்துப் பார்த்த பணியாளர் அதிர்ச்சி அடைந்தார். காரணம், அந்தப் பில்லில் டிப்ஸ் பிரிவில் 10 ஆயிரம் டாலர் என்று எழுதப்பட்டிருந்தது. பொதுவாக அந்த உணவகத்துக்கு வரும் வாடிக்கையாளர்கள் பில் தொகையில் 15% 25% வரையிலேயே டிப்ஸ் வழங்குவது வழக்கம். ஆனால், மார்க் 30,835% டிப்ஸாக வழங்கியுள்ளார். இதுகுறித்து அந்த பணியாளர் உணவகத்தின் மேலாளரிடம் தெரிவித்தார். உடனே, மேலாளர் டிம் ஸ்வின்னி, அந்த வாடிக்கையாளரிடம் சென்று, டிப்ஸ் தொகையில் 10 ஆயிரம் டாலர் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். தவறுதலாக எழுதிவிட்டீர்களா என்று கேட்டுள்ளார். அதற்கு அவர், இல்லை. அந்தத் தொகையைத்தான் நான் டிப்ஸாக வழங்க விரும்புகிறேன் என்றார். இதுகுறித்து அவர் கூறும்போது, என்னுடைய ஆத்ம நண்பர் இறந்துவிட்டார். அவரது இறுதிச் சடங்குக்காகவே நான் இந்த ஊருக்கு வந்துள்ளேன். நண்பரின் நினைவாக இந்த டிப்ஸை வழங்க விரும்பினேன் என்றார்.

# அமெரிக்காவில் மருத்துவ ஆராய்ச்சிக்காக 200 ஏக்கரில் 30 ஆயிரம் குரங்குகளுக்கு மினி நகரம்



அமெரிக்காவைச் சேர்ந்த மருந்து உற்பத்தி நிறுவனமான 'சேபர் ஹியூமன் மெடிசின்ஸ்' தொடர்ந்து மருந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறது. இந்நிறுவனம் ஜார்ஜியா மாகாணத்தின் பெய்ன்பிரிட்ஜ் நகருக்கு அருகே சுமார் 30,000 குரங்குகள் வசிக்க 200 ஏக்கரில் ஒருகுட்டி நகரை உருவாக்க திட்டமிட்டுள்ளது. இங்கு இனப்பெருக்கம் செய்யப்பட்டு வளர்க்கப்படும் நீண்டவால் குரங்குகளை பல்கலைக்கழகங்கள் மற்றும் மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கு மருத்துவ ஆய்வுக்கு அனுப்பி வைக்க இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதுகுறித்து அப்பகுதிவாசி டேவிட் பார்பர் கூறும் போது, பெய்ன்பிரிட்ஜ் நகரில் சுமார் 14 ஆயிரம் மக்கள் வசிக்கின்றனர். இந்த நகரில் 30 ஆயிரம் குரங்குகளை வளர்த்தால் எங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும். எனவே இந்த திட்டத்தை உடனடியாக கைவிட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார். இதுபோல, மருத்துவ ஆராய்ச்சிக்காக குரங்குகளை ஓரிடத்தில் அடைத்து வைத்து இனப்பெருக்கம் செய்வது கொடூரமானது என விலங்குகள் நல அமைப்புகள் தெரிவித்துள்ளன.

# CELEBRITY WISHES


































# CELEBRITY WISHES

























kotak life

**Secure your family against the burden of loan repayment with our life insurance solutions.**

Visit www.kotaklife.com or call us at 1800-209-8800 today.

Hum hain... hamesha

**BEWARE OF SPURIOUS PHONE CALLS AND FICTITIOUS / FRAUDULENT OFFERS**
IRDAI is not involved in activities like selling insurance policies, announcing bonus or investment of premiums. Public receiving such phone calls are requested to lodge a police complaint.

**Kotak Mahindra Life Insurance Company Ltd.** Regn. No.: 107, CIN: U66030MH2000PLC128503, Regd. Office: 2nd Floor, Plot # C- 12, G- Block, BKC, Bandra (E), Mumbai - 400051.
Website: https://www.kotaklife.com | WhatsApp: 9321003007 | Toll Free No. - 1800 209 8800. Ref. No.: KLI/21-22/P-BB/1478.
**Trade Logo displayed above belongs to Kotak Mahindra Bank Limited and is used by Kotak Mahindra Life Insurance Company Ltd. under license.**

## அரசியல் செய்திகள்

# உத்தர பிரதேச மாநிலம் வாரானசியில் ரூ.13 ஆயிரம் கோடியில் திட்டங்கள் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்



உத்தர பிரதேச மாநிலம் வாராணசியில் ரூ.13 ஆயிரம் கோடி மதிப்பிலான திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைத்து, பல்வேறு திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.பனாஸ் காசி சங்குல் பால் பதப்படுத்தும் நிலையம், எச்பிசிஎல் நிறுவனத்தின் காஸ் சிலிண்டர் ஆலை, பட்டு ஆடைகளில் அச்சிடும் மையம், சிக்ரா விளையாட்டு அரங்கம், துப்பாக்கி சுடும் மையம் மற்றும் பல்வேறு சாலை திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். தேசிய பேஷன் டெக்னாலஜி மையம், பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் புதிய மருத்துவக் கல்லூரி மற்றும் முதியோர்களுக்கான தேசிய மையம் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, ஆன்மிக சுற்றுலா திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.விழாவில் பிரதமர் மோடி பேசியதாவது: கடந்த 10 ஆண்டுகளாக வாராணசிஎம்.பி.யாக உள்ளேன். இந்த நகரம் என்னை பனாரஸியாகவே மாற்றிவிட்டது. புதிய காசியை ஏற்படுத்துவதற்கான பிரச்சாரம் ரூ.13,000 கோடி மதிப்பிலான திட்டங்களுடன் தொடங்கியுள்ளது. பனாஸ் பால் பண்ணையில், பசு வளர்ப்பில் ஈடுபடும் பெண்களை சந்தித்து பேசியது மிகவும் மகிழ்ச்சி. இவர்களுக்கு 2 ஆண்டுகளுக்கு முன்பு கிர் வகை பசுக்கள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு பசுவும் 20 லிட்டர் வரை பால் தருகிறது. பெண்களை லட்சாதிபதிகளாக இந்த பசுக்கள் மாற்றியுள்ளன. நாட்டில் உள்ள சுயஉதவி குழு பெண்களுக்கு இது மிகப் பெரிய உற்சாகம். இவ்வாறு பிரதமர் பேசினார்.16-ம் நூற்றாண்டை சேர்ந்த பக்தி இயக்க துறவி ரவிதாஸ் 647-வது ஜெயந்தியை முன்னிட்டு வாராணசியில் நடைபெற்ற நிகழ்ச்சியிலும் பிரதமர் மோடி பங்கேற்றார். அவர் பேசியதாவது:இண்டியா கூட்டணியில் உள்ள தலைவர்கள் சாதியின் பெயரால் வன்முறையை தூண்டுவதில் தீவிரமாக உள்ளனர். தலித்கள் மற்றும் பின்தங்கியவர்களுக்கான நலத் திட்டங்களை அவர்கள் எதிர்க்கின்றனர். ஏழைகளின் நலன் என்ற பெயரில், தங்கள் குடும்பத்துக்காக அரசியல் செய்கின்றனர்.ஆனால், பாஜக அரசு அனைவருக்காகவும் செயல்படுகிறது. பாஜக அரசின் திட்டங்கள் அனைவருக்குமானது. அனைவருடனும், அனைவருக்குமான வளர்ச்சி என்பதுதான் எனது அரசின் மந்திரம். பின்தங்கியவர்களுக்கு முன்னுரிமை அளித்தால்தான் சமத்துவம் உருவாகும். அதனால்தான் சமூகத்தில் உள்ள அனைவரின் முன்னேற்றத்துக்காக எனது அரசு பாடுபடுகிறது. கடந்த 10 ஆண்டுகளில், பின்தங்கியவர்களை மனதில் வைத்தே அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏழைகளின் மேம்பாட்டுக்காக மிகப் பெரிய திட்டங்கள் எல்லாம் பாஜக ஆட்சியில் கொண்டு வரப்பட்டுள்ளன. இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

# வேலை இல்லையா? அல்லது நாம் வேலையை தேடவில்லையா!!



வேலை இல்லை என்பது ஒரு மாயை. 140 கோடிக்கும் மேல் மக்கள் தொகை உள்ள நாட்டில் வேலை இல்லை என்றால் அது நம் மனநிலையே தவிர உண்மையல்ல.

இளைஞர்கள் வேலையில்லாமல் இருப்பதற்கு இந்நான்கு காரணிகளே,

1.பெற்றோர்கள்
2.வேலை தேடும் இளைஞர்கள்
3.கல்லூரிகள்
4.தொழில் நிறுவனங்கள்

**1. பெற்றோர்கள்:**

பெற்றோர்கள் செய்யும் பெரிய தவறு நம் குழந்தைகள் கஷ்டப்படாமல் வேலை செய்ய வேண்டும் ஏசி நிறுவனத்தில் உட்கார்ந்து கொண்டே வேலை செய்ய வேண்டும். அதற்கு நாம் தான் சொந்தமாக நிறுவனத்தை உருவாக்க வேண்டும்.நாட்டில் ஏராளமான வேலைகள் உள்ளன. ஆனால் கஷ்டப்படாமல் செய்யும் வேலை இதுவரை கண்டுபிடிக்கவில்லை. நான் பெற்றோர்களுக்கு சொல்லும் ஒரு கருத்து. தயவு செய்து நீங்கள் உங்கள் குழந்தைகளின் வாழ்க்கையை வாழாதீர்கள். தனித்தன்மையோடு செயல்பட விடுங்கள். நான் பட்ட கஷ்டம் என் பிள்ளை படக்கூடாது என்று அவர்கள் வாழ்க்கை முழுக்க கஷ்டப்பட வைத்து விடாதீர்கள். அவர்கள் படித்த படிப்புக்கேற்ப வேலை செய்யட்டும். கஷ்டப்படாமலே வேலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை விட்டு விடுங்கள்.இளமையில் வியர்வை சிந்தாதவன் முதுமையில் கண்ணீர் சிந்துவான்

**2. வேலை தேடும் இளைஞர்கள்:**

நீங்கள் படித்த படிப்புக்கேற்ப வேலை தேடுங்கள் அனுபவத்தை பிரதானமாக கருதுங்கள் சம்பளத்தை இரண்டாம் பட்சமாக எண்ணுங்கள் முதல் மூன்று ஆண்டுகள் நல்ல அனுபவம் கிடைத்தவனுக்கு பெரிய வெற்றி காத்துக் கொண்டிருக்கிறது. நாம் அறிந்த INDRA NOOYI ஆரம்பத்தில் அனுபவத்தை முதன்மையாக கருதியதால் இன்று PEPSICO நிறுவனத்தின் தலைவர்.

வேலை கிடைக்க நீங்கள் செய்ய வேண்டிய முக்கிய செயல்கள்.

1.உங்கள் Bio Data வை நேர்த்தியாக தயார் செய்யுங்கள்.
2.அந்த Bio Data,Naukri,FoundIT,IIM Jobs,Indeed,LinkedIN போன்ற Job Portal களில் சீராக பதிவு செய்யுங்கள்.
3.கம்பெனியிலிருந்து நேர்காணல் அழைக்கும் போது வாரத்தில் ஐந்து நாட்கள் வேலையா? சம்பளம் எவ்வளவு? நாளை வரலாமா? போன்ற தேவையற்ற கேள்விகளை கேட்டு வேலை அளிப்பவரை வெறுப்பேற்றாதீர்கள்.
4.வேலை கொடுக்கும் நிறுவனம் வீட்டிலிருந்து தூரத்தில் இருக்கிறது என்று சாக்கு சொல்லாதீர்கள். இப்போது இருக்கும் போக்குவரத்து வசதிகளுக்கு தூரம் ஒரு தடையல்ல.
5.வாரத்தில் 6 நாட்கள் தினமும் குறைந்தது 8 மணி நேரமாவது உழையுங்கள், நீங்கள் Infosys நாராயணமூர்த்தி ஆகலாம் Ratan Tata ஆகலாம்.

**3. கல்லூரிகள்:**

எனக்கு ஒரு சந்தேகம்! கல்லூரி ஆசிரியர் பணி தவிர எந்த கார்ப்பரேட் நிறுவனத்திலும் வேலை செய்யாத, ஒரு நேர்காணலையும் கண்டிராத ஆசிரியர் எப்படி ஒரு மாணவனை வேலைக்கு தயார் செய்ய முடியும்? சிலர் என்னிடம் கேட்பார், தொழில் முனைவோராக மாறலாமே? அதற்கும் அதே பதில் தான். இதுவரை சொந்தமாக தொழில் தொடங்காத ஆசிரியர் எப்படி ஒரு மாணவனை தொழில் முனைவோராக மாற்ற முடியும்? என் மீது கோபம் வேண்டாம். எனக்கு ஆசிரியர்கள் மீது மிக்க மரியாதை உண்டு. அவர்களால் தான் நான் இன்று ஒரு தொழில் முனைவோராக உள்ளேன். ஆனால் இன்றைய காலம் வேறு. கல்லூரிகள் தொழில் நிறுவனங்களோடு இணைந்து மாணவர்களை தயார் செய்ய வேண்டும். அப்படி தயார் செய்தால் நிச்சயம் வேலையும் கிடைக்கும், நாடும் உயரும். கல்லூரிகள், கல்வியோடு சேர்ந்து அனுபவத்தை கொடுக்க முயற்சி செய்யுங்கள். 50 - 50. கல்வி 50%, அனுபவம் 50%, நிச்சயம் வேலை உறுதி.

**4. தொழில் நிறுவனங்கள்:**

அனுபவங்கள் உள்ளவர்கள் மட்டும் வேண்டும் என்ற எண்ணத்தை விடுத்து அனுபவம் அற்றவர்களுக்கும் வேலை வாய்ப்பை அளியுங்கள். வேலை கொடுத்தால் தானே அனுபவம் வரும் . கல்லூரிகளோடு கைகோர்த்து மாணவ சமுதாயத்தை வேலைக்கும் தொழில் தாங்குவதற்கும் தயார் செய்யுங்கள். இந்தியா வல்லரசாவதற்கு தயாராக உள்ளது. இப்போது நாம் எல்லோரும் கைகோர்த்து மனித வளத்தை நல்ல முறையில் பயன்படுத்தினால் நாம் வல்லரசு ஆவது உறுதி.

**K.A. SIVAKUMAR**
Co-Founder & CEO
Bell Curve Strategic Consultancy Pvt. Ltd.
Youtube: F3 Sivakumar
Mobile: 9940415942 / 9444201230
Mail: sivakumar.ka@thebellcurve.in







**JB Group** நிறுவனத்தின் அலுவலர் திவ்யலட்சுமி அவர்களின் திருமண நிச்சயதார்த்த விழாவிற்கு பாலகிருஷ்ணன் அறக்கட்டளையின் செயலாளர் மற்றும் நிர்வாக அறங்காவலர் **சுதா சுகுமார்** அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார்

## ராசிபலன்

**மேஷம்**

ராசிநாதன் செவ்வாய் மகரத்தில் உச்சம் பெற்றிருப்பது சிறப்பாகும். அவர் பத்தாம் இடத்திலிருந்து சுகஸ்தானத்தைப் பார்க்கிறார். அவரோடு தன குடும்ப அதிபதி சுக்கிரனும் இணைந்திருக்கிறார். சுபகாரிய பேச்சுகள் முடிவாகும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். மனதில் அமைதியும் சந்தோஷமும் இருக்கும். தைரியம் பிறக்கும். துணிவு துணை நிற்கும். பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட பிரச்னைகள் தீர்வதோடு, மனை வாங்கும் வாய்ப்பும் இருக்கும். சுக்கிரனால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். வேலையில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வும், பதவி உயர்வும் கிடைக்க வாய்ப்புண்டு. பெண்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**ரிஷபம்**

ராசிநாதன் சுக்கிரன் 9-ல் உச்சம் பெற்ற செவ்வாயோடு இணைந்து, உங்கள் வீரியஸ்தானத்தை பார்வையிடுகின்றார். இல்லறத்தில் இனிமை இருக்கும். சுபகாரியங்கள் முடிவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் பணி நிரந்தரம் பெறுவார்கள். கொடுத்த கடன்கள் வசூலாகிவிடும். கலைஞர்களுக்கு நல்வாய்ப்பு கிடைக்கும். கணவன்-மனைவி உறவுகளால் உற்சாகம் அதிகரித்து, ஆக்கப்பூர்வமான சில முடிவுகள் கிடைக்கும். இடமாற்றங்களால் நன்மை உண்டு. சனி பலமாக இருப்பதால், உங்கள் தொழில் முயற்சிகள் வெற்றிகரமாகும். புதிய தொழில்களை ஆரம்பிக்கும் வாய்ப்புகளைத் தரும். தொழில் லாபம் அதிகரிக்கும். நினைத்த காரியங்கள் முடியும் வண்ணம் கிரக நிலைகள் இருக்கின்றன.

**மிதுனம்**

தைரிய வீரிய ஸ்தானாதிபதி சூரியனும் பாக்யாதிபதி சனியும் ஒன்பதாம் இடத்திலே சேர்ந்திருப்பது யோகம். 12-க்கு உரிய சுக்கிரன் எட்டில் உச்சம் பெற்ற செவ்வாயோடு இணைந்து உங்கள் தன பாவத்தைப் பார்ப்பதால் எதிர்பாராத வரவுகள் உண்டு. வேலை, தொழிலில் உள்ளவர்களுக்கு பாராட்டும் கௌரவமும் அதிகரிக்கும். வியாபாரம், தொழில் நல்ல முறையில் நடைபெறும். இழந்து போன பல வாய்ப்புகளைத் திரும்ப கிடைக்கச் செய்யும். தடைப்பட்டிருந்த காரியங்கள் வேகம் எடுக்கும். பெண்களால் சில சாதகங்கள் உண்டு. சுபகாரியங்கள் நடைபெறும். ராகு, வெளிநாட்டில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவார்.

**கடகம்**

ராசிநாதன் சந்திரன் இந்த வாரம் முழுவதும் உங்களுக்கு அமைதியான மனநிலையைத் தருவார். அதே சமயம், 11க்குரிய சுக்கிரன் ஏழுக்குரிய செவ்வாயோடு இணைந்து உங்கள் ராசியைப் பார்ப்பதால், வெற்றிகரமாக பணிபுரிவீர்கள். ஆரோக்கியம் அதிகரிக்கும். சுப செய்திகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உயர்வு வரும். யோககாரகனான செவ்வாய் உச்சம் பெற்று மகர ராசியில் இருந்து கடகத்தைப் பார்ப்பது, சிரமத்தைக் குறைத்து முன்னேற்றத்தை அதிகரிக்கும். பொருளாதார நிறைவை உண்டாக்கும். புதிய வேலை முயற்சிகள் பலிக்கும். கௌரவம் கிடைக்கும். வியாபாரம் தொழில் முன்னேறும். கலைஞர்களுக்கு நல்வாய்ப்புகள் கிடைக்கும்.

**சிம்மம்**

ராசிநாதன் சூரியன், ஏழில் சனியோடு இணைந்து இருக்கிறார். அவருடைய பார்வை உங்கள் ராசியின் மீது பட்டாலும், குருவின் பார்வையும் படுவதால், எந்தப் பிரச்னையில் இருந்தும் மீண்டு வந்துவிடுவீர்கள். சூரியன் சனியோடு ஆறாம் இடத்தில் இணைந்திருப்பது யோகமாகும். செவ்வாய் அமைப்பினால் பூமி வாங்கும் யோகம் உண்டு. வேலையில் முக்கிய பொறுப்புகள் கிடைக்கும். தொழில் அபிவிருத்தி அடையும். கலைஞர்களுக்கு வருமானம் அதிகரிக்கும். வீடு கட்டுவது முதலிய வேலைகளில் கவனம் திரும்பும். பாக்யஸ்தானத்தில் குரு பகவான் அமர்ந்து உங்கள் ராசியைப் பார்ப்பதால், எந்தப் பிரச்னையும் பெரிய அளவில் பாதிப்பைச் செய்யாது. மேலதிகாரிகளிடம் நன்மதிப்பு கிடைக்கும்.

**கன்னி**

ராசிநாதன் புதன் சூரியனுடன் இணைந்து ஆறாம் இடத்தில் யோகத்தை ஏற்படுத்தினாலும், சனியும் இணைந்து இருப்பதால், அது குறைவாகவே வேலை செய்யும். அதே நேரத்தில், ஐந்தில் செவ்வாய்-சுக்கிரன் இணைந்து இருக்கிறார்கள். உங்கள் லாபஸ்தானத்தையும் பார்க்கிறார்கள். உத்தியோகத்தில் பதவி உயர்வுண்டு. புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு. வருமானம் ஏதோ ஒரு வழியில் கைகொடுக்கும். சனி ஆட்சி பெற்று இருப்பதால், மனோ ரீதியான சிரமங்கள் குறையும். மனம் சற்று தெளிவடையும். நண்பர்கள் உதவுவார்கள். 12-க்கு உரியவன் அதாவது சூரியன் ஆறாம் இடத்தில் இருப்பது புதிய பலத்தை ஏற்படுத்தும். போட்டித் தேர்வுகளில் வெற்றி கிடைக்கும். சூரியன்-சனி சேர்க்கை ஆறில் இருந்தாலும், சனியின் தனிப்பட்ட பலம் உங்களுக்கு பல நன்மைகளை செய்ய தவறாது.

**விருச்சிகம்**

11-ல் உள்ள கேது வெற்றி வாய்ப்புகளைத் தருவார். ராசிநாதன் செவ்வாய் தைரிய ஸ்தானத்தில் உச்சம் பெற்று இருக்கிறார். அவரோடு சப்தமாதிபதி சுக்கிரன் இணைந்திருக்கிறார். வியாபாரத்தில் போட்டிகள் விலகும். பெண்களால் நன்மை ஏற்படும். புதிய வாகன யோகமும் வீடு கட்டும் யோகமும் உண்டாகும். மேலதிகாரிகள் உங்களை பாராட்டுவார்கள். பாக்யஸ்தானம் வலுப்பெறுவதால் நினைத்தது நினைத்தபடி நிறைவேறும். பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். சுறுசுறுப்பாக இருப்பீர்கள். வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. அரசாங்க காரியங்கள் பலிதமாகும்.

**துலாம்**

தன குடும்ப அதிபதி செவ்வாய் உச்சம் பெற்று பத்தாம் இடத்தைப் பார்ப்பதால், தொழில் வளம் அதிகரிக்கும். கூட, ராசிநாதன் சுக்கிரனும் அமர்ந்திருக்கிறார். ஆறில் ராகு, அற்புத பலன்களை செய்யும். சனியும் சூரியனும் ஐந்தாமிடத்தில் இணைவதும் நல்ல யோகம்தான். காரணம் 5-க்கு உரியவர் ஐந்தில் ஆட்சி பெறுகின்றார். புதிய முதலீடுகள் கிடைக்கும். குடும்பத்தில் முன்னேற்றம் ஏற்படும். பொருளாதார வரவுகள் உயரும். கூடுதல் வருமானம் கிடைக்க வழி கிடைக்கும். அயல்நாட்டு நிறுவனங்களால் வேலை வாய்ப்பு உண்டு. புதியச் சொத்துக்களை வாங்குவீர்கள். போட்டிகளில் எதிர்பார்த்த வெற்றிகள் பெறுவார்கள். கணவன்-மனைவி அன்பு அதிகரிக்கும்.

**தனுசு**

ராசிநாதன் பலம் பெற்று இருக்கிறார். 2-ல் பஞ்சமாதிபதி செவ்வாய் உச்சம் பெற்று இருக்கிறார். கூடவே லாப அதிபதி சுக்கிரன் இணைந்து இருக்கிறார். தைரிய ஸ்தானத்தில் சனி, சூரியன் இணைந்து இருக்கின்றார்கள். புதிய முயற்சிகளில் வெற்றிக் கிடைக்கும். தொழிலில் மந்த நிலைமாறும். சொந்தவீட்டுக் கனவுகள் சீராகும். குடும்ப உறுப்பினர்கள் அனுசரணையாக இருப்பார்கள். குரு ராசியைப் பார்க்கிறார். சுபகாரியத் தடைகள் நீங்கும். தேக ஆரோக்கியத்தை அபிவிருத்தி செய்வார். 10-ல் உள்ள கேது ஆன்மீக பயணங்களைத் தரும். புதிய சந்தர்ப்பங்கள் அமையும். கௌரவம் அதிகரிக்கும்.

**மகரம்**

4,11-க்குரிய செவ்வாய் ராசியில் உச்சம் பெற்று இருப்பதும், அவரோடு ஐந்து பத்துக்குரிய சுக்கிரன் இணைந்திருப்பதும் நல்லது. சூரியனும் சனியும் தனஸ்தானத்தில் இணைந்திருக்கிறார்கள். பொருளாதாரம் சீராக இருக்கும். கலைஞர்களுக்கு நல்ல வாய்ப்புண்டு. பாக்யஸ்தானத்தில் இருக்கும் கேது, உங்களுக்கு நல்ல வகையில் உதவுவார். நேர்மறை ஆற்றலை வளர்த்துக் கொண்டால் உங்களுக்கு சிக்கல் இல்லை. வளர்ச்சி அதிகரிக்கும். திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். வெகு காலம் வராமல் இருந்த பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புண்டு.

**கும்பம்**

ராசியில் சூரியனும் சனியும் இணைந்திருக்கிறார்கள். ஒன்று ஏழுக்குரியவர் இணைந்து ராசியில் வீற்றிருந்து ஏழாம் இடத்தைப் பார்ப்பது சிறப்பாக பலன் செய்யும். சுப செலவுகள் அதிகரிக்கும். சுபகாரியங்கள் நடக்கும். பெரியவர்களின் அறிமுகம் நட்பு கிடைக்கும். தொழிலில் முதலீடுகள் அதிகரிக்கும். 12-ல் சுக்கிரன் பலமாக இருக்கின்றார். தொழிலில் சீரான லாபம் கிடைக்கும். இடமாற்றங்கள் சிறக்க உண்டு. கலைஞர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும்.

**மீனம்**

குரு பத்தாம் இடத்தைப் பார்ப்பதால், தொழில் நன்றாகவே இருக்கும். லாபஸ்தானத்தில் தன குடும்ப அதிபதி செவ்வாய் உச்சம் பெற்று இருப்பது உங்களுக்கு வருகின்ற பல்வேறு பிரச்னைகளை போக்கும். சுக்கிரன் பலமாக இருப்பதால், கலைஞர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். குடும்ப அதிபதி செவ்வாய் லாபஸ்தானத்தில் சுக்கிரனோடு இணைந்து உச்சம் பெற்று ஐந்தாவது ராசியைப் பார்க்கிறார். சகோதரர்களால் நன்மை உண்டு. புதிய வாகன யோகம் உண்டாகும். அரசாங்க அனுகூலங்களும் உண்டு.

## ஆன்மீகம்

# மகத்தான வாழ்வருள்வார் ஸ்ரீமதங்கீஸ்வரர்



நாகை மாவட்டம் சீர்காழி அடுத்துள்ள திருநாங்கூர் கிராமத்தில் அருள்பாலிக்கிறார் ஸ்ரீமதங்கீஸ்வரர். 'நமசிவாய வாழ்க, நாதன்தாள் வாழ்க, இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!' என்று அவன் அருளாலே அவன் தாள் வணங்கி வரும் அடியார்களுக்கு வாழ்வில் ராஜயோகத்தினையும், பதினாறு செல்வங்களையும் அளித்து மகத்தான வாழ்வளிப்பவர். இத்தலத்தின் இறைவனாக மதங்கீஸ்வர சுவாமியும், இறைவியாக ஸ்ரீராஜமாதங்கீஸ்வரி அஞ்சனாட்சி அம்பிகையும் அருள்பாலிக்கிறார்கள். சகல கலைகளுக்கும் அதிபதியாக திகழ்கின்ற அம்பிகையாக ஸ்ரீராஜமாதங்கீஸ்வரி அஞ்சனாட்சி காட்சி தருகின்றாள். அபிராமி பட்டர், அபிராமி அந்தாதியில் சொன்ன பதினாறு பேறுகளை பெற இத்தல இறைவியை மனம், மொழி, மெய் ஒன்றுபட ஆத்மார்த்தமாக பூஜித்தால் எல்லா நலன்களையும் பெறலாம். மகாசரஸ்வதி தேவிக்கே இத்தல ஈஸ்வரி வித்யாப்யாசம் செய்ததால் இத்தல இறைவியை வழிபடுவோர் கல்வி, உயர்பதவி, தொழில் மேன்மை பெறுவர் என்பது ஐதீகம். திருமணத் தடைகள் நீங்கி இனிய இல்லறம் நல்லறமாக அம்பிகை அருளால் அமையும். இத்தலத்தில் ராஜகோபுரம் இல்லை. வடக்கு திசை நோக்கி ஆனந்த கோலத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீஆனந்த மகாகாளி தாயை வழிபட்டால் ஆனந்த வாழ்வை பெறலாம். இத்தலத்தில் இரு நந்திகள் வீற்றிருக்கின்றன. கிழக்கு நோக்கி உள்ள நந்தியின் பெயர் சுவேத நந்தி. மேற்கு நோக்கி வீற்றிருக்கும் நந்தி பெயர் மதங்க நந்தி. 'ஓம் நமசிவாய, ஓம் நமசிவாய' என்று இவ்விரு நந்தியம் பெருமான்களை பிரதோஷ தினங்களில் மனமுருக தரிசித்தால், 108 சிவாலயங்கள் சென்று பிரதோஷ தரிசனம் செய்த பலன் கிடைக்கும் என்பது ஐதீகம். பராசவனம் என்பது திருநாங்கூரின் புராண கால பெயராகும். இங்குள்ள மதங்காசிரம் என்ற இடத்தில் கடுந்தவம் புரிந்த மதங்க மாமுனிவரின் வேண்டுதல்படி திருமால் பன்னிரு மூர்த்திகளாகி பராசவனத்தில் வெவ்வேறு பகுதிகளில் எழுந்தருளி சர்வேஸ்வரனை வழிபட்டதாகவும் அவருக்கு அம்பிகையே மகளாகத் தோன்றி திருவெண்காட்டில் உள்ள அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரரை மணம் புரிந்தார் என்று பராசவனப் புராணம் கூறுகிறது. சைவ சமயக் குரவர் நால்வரில் ஒருவரான சுந்தரர் தம் திருமுறையில் இத்தலத்தைப் பற்றி போற்றியுள்ளார். கோயில் அமைந்த விதமும் மகா அற்புதம். கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், சுற்றுப்பிராகாரம், திருச்சுற்று மதில் கொண்டு கிழக்கு திசை நோக்கி அமைந்துள்ளது. கருவறையின் கிழக்கு புறத்தில் இடது பக்கத்தில் மாதங்கீஸ்வரி சந்நதியும், சண்டிகேஸ்வரர் சந்நதியும் உள்ளது. திருச்சுற்றின் வடக்குப் புறத்தில் தெற்கு திசை நோக்கி காளி சந்நதியும், அடுத்து மதங்கமுனி சந்நதியும் உள்ளது. தென்மேற்கு மூலையில் ஸ்ரீவிநாயகர் சந்நதி அமைந்துள்ளது. இதையடுத்து ஸ்ரீமுருகப் பெருமான் ஸ்ரீவள்ளி-தெய்வானை சந்நதிகளும், வடமேற்கு மூலையில் மகாலட்சுமி, ஸ்ரீதேவி, பூதேவி சந்நதிகளும் திகழ்ந்து அருள்பாலிக்கின்றனர். தலவிருட்சமாக வன்னி மரம் அமைந்துள்ளது. இத்தல சிற்பங்கள் முற்கால சோழர்காலத்தை சார்ந்தவையாகும். திருச்சுற்று சந்நதிகளிலுள்ள நாராயணி சிற்பம், நவக்கிரக சிற்பங்கள் அருள் தரும்படி விதமாக வீற்றிருக்கின்றன. அர்த்த மண்டபத்தில் கி.பி. 12, 13ம் நூற்றாண்டைச் சேர்ந்த முருகப் பெருமான், பைரவர், சூரியன், தெய்வச் சிற்பங்கள் தனிச்சிற்பங்களாக உள்ளது. "நாங்கூர் ஈசனை நாடி தொழுவோர்க்கு நாளும் கோளும் நன்மை நல்குமே" என்ற ஆன்றோர் அருளமுத வாக்கிற்கேற்ப இத்தலம் மிகவும் பிரசித்தி பெற்றது. மணம் மல்கு நாங்கூர், நின்றருளுமிடம் நாங்கை எனவும் திருமங்கையாழ்வார் திருநாங்கூர் பற்றி அற்புதமாக போற்றியுள்ளார். 108 வைணவ திவ்ய திருப்பதிகளில் பதினொன்றாவதாக திருநாங்கூரில் அமைந்துள்ளது மிகவும் விசேஷம். ஒவ்வொரு ஆண்டும் 11 கருட சேவை உற்சவம் நடைபெறும். இந்த 11 கருட சேவை உற்சவம் தை அமாவாசைக்கு மறுதினம் திருநாங்கூரில் ஸ்ரீநாராயண பெருமாள் திருக்கோயிலில் நடைபெறும். இதேபோன்று 12 சிவபெருமானின் ரிஷப சேவை திருக்கல்யாண அருள்மழை பொழியும் திருக்காட்சி வைபவம் 100 ஆண்டுகளுக்கு பிறகு 2016ம் ஆண்டு முதல் அருள்மிகு மதங்கீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்றது பெருஞ் சிறப்பாகும். திருநாங்கூர் சைவமும் வைணவமும் சங்கமிக்கும் தண்வயல் சூழ் தெய்வத் திருத்தலம். பதினொரு வைணவ திருப்பதிகளையும் 11 (ஏகாதசி) ருத்ரர்களையும் தரிசிப்போர்க்கு ஸ்ரீவைகுண்டம் திருக்கயிலாய மகா தரிசனம் செய்த பெரும் புண்ணியம் கிட்டும். பதவி, பட்டம், புகழ், செல்வாக்கு, செல்வங்கள் என அனைத்து நல்ல விஷயங்களை பெறவும், இழந்த நல்ல விஷயங்களை மீண்டும் பெற்று ராஜயோகம் வாழ்வில் பெற இத்தல இறைவியான ஸ்ரீராஜமாதங்கியையும் ஸ்ரீமதங்கீஸ்வரரையும் மனதார வழிபட்டாலே போதும். திருத்தலம் நாகை மாவட்டம் சீர்காழியிலிருந்து தென்கிழக்கே 10 கி.மீட்டர் தொலைவில் அமைந்துள்ள திருநாங்கூரில் உள்ளது.

CHENNAI

## PETROL, DIESEL PRICES REMAIN UNCHANGED FOR 460 RD DAY IN CHENNAI




CHENNAI: In Chennai, the price of a litre of petrol and diesel has been constant over the last 644 days at Rs.102.63 and Rs. 94.24 respectively. petrol and diesel prices still remain unchanged.

The government has approved the practice of daily determination of fuel prices in line with international crude oil prices.

Henceforth, oil companies are regulating petrol and diesel prices on a daily basis, keeping a check on fluctuation.

METRO PEOPLE
English & Tamil Weekly

Editor:
S. SUDHA

Sub-Editor:
S. Surendran

Reporter:
P. Dinesh
M. Saravanan

Photographer:
S.Rishikesh

Layout Artist:
R. Bala Suresh

Publication Address

Office No. F, Door No.190,
Old No. 758A, Second Floor
Mount Chambers Anna Salai,
Chennai - 600 002.

75500 01222

# TN RENAMING CENTRAL SCHEMES, SAYS ANNAMALAI



BJP state president K Annamalai on Thursday said the State government has been renaming and implementing Central government schemes.

Addressing the media here, the BJP leader said the issue of Tamil Nadu government renaming the projects of the Central government was raised in the Assembly. Alleging that the State budget lacked vision and had nothing new to offer, Annamalai said only old projects were announced again.

"Coimbatore continues to be sidelined as funds weren't allotted to metro train and libraries," he said.

Claiming that Vande Bharat train was brought to Coimbatore after great struggle as Coimbatore railway junction is crowded with too many trains; Annamalai said, hence some trains were to be diverted through Podanur junction. "Now there is even a possibility of introducing bullet trains to Coimbatore," he said.

He also condemned the derogatory remarks against a Tamil film actress and demanded police to take strict action. The BJP leader earlier took 'en mann en makkal' padayatra along with Union Ministers L Murugan and Rajeev Chandrasekhar in Coimbatore.

Earlier, while addressing the media, L Murugan said the Central government has given Rs 11 lakh crore to implement various developmental schemes in Tamil Nadu. "Only because of the funds given by the Central government, the state has achieved remarkable growth in its infrastructure," he said.

# 'TO BRING REFORMS IN IT SECTOR, I REPLACED PTR FROM FINANCE' : STALIN




Dismissing all the speculations, Chief Minister M K Stalin on Friday clarified the reason behind the change of portfolio to State Minister Palanivel Thiagarajan.

"As I wanted to bring reforms in the Information Technology department like finance department, I replaced minister Palanivel Thiagarajan (PTR) from finance to IT department," Stalin said after launching the second 'UmagineTN 2024', a prestigious event hosted by the Tamil Nadu government's Information Technology and Digital Services department at Chennai Trade Centre in Nandambakkam in the city.

Lauding his Cabinet colleague PTR, Stalin said, "As a finance minister for the first two years of my regime, he (PTR) brought many changes and reforms in the department. As I felt that some reforms were needed in the IT sector, I shifted him to IT and he is performing well in the department."

Recalling the reforms that were implemented in the previous DMK regime-led by his father and DMK patriarch, M Karunanidhi, Stalin said the great leap in the IT sector in Tamil Nadu started during the DMK regime and Karunanidhi was the one who did it a quarter of a century ago."Our aim is to make Tamil Nadu a one trillion dollar economy and a Capital of human resources and the development should be reflected in the standard of living of the people and the development of the IT sector is visible. This is the unique feature of the Dravidian Model of governance," he noted.

Further, Stalin said steps have been taken to implement 5G spectrum across the state and his government has expanded the FibreNet project and more than 751 schemes in 36 sectors have been digitised. and questioned whether it is a digital revolution or not.

Pointing out the schemes announced in the Tamil Nadu Budget, the chief minister said that he is confident that Tamil Nadu will rise as the premier state in India and assured that his government will make Tamil Nadu a state that is the Capital land for information technology sector.

Australia, an innovation partner country for UmagineTN 2024, also has a presence at the two-day event, with Amber Jade Sanderson, Western Australia's Minister for Health and Mental Health along with a delegation of more than 20 businesses and education organisations from Western Australia.The Australian government through the Consulate-General Chennai and in partnership with the state of Western Australia highlighted Australia's strengths in the advanced technology, innovation and education sector at the Australian pavilion in the UmagineTN 2024 conference. State Minister for MSMEs, TM Anbarasan, MeitY secretary S Krishnan and Consulate-Generals of US, Japan, France, Korea were present during the inaugural ceremony of UmagineTN.

TAMILNADU

# MHC DIRECTS ECI TO CONSIDER GK VASAN'S BI-CYCLE SYMBOL CLAIM WITH SENIORITY



The Madras High Court (MHC) directed the Election Commission of India (ECI) to consider the application of Tamil Maanila Congress-Moopanar(TMC-M) president G K Vasan, claiming bicycle symbol for the ensuing 2024 general election with seniority.

A division bench comprising Justice R Mahadevan and Justice Mohammed Shaffiq heard the petition preferred by GK Vasan seeking to direct the ECI to allot bi-cycle symbol to his party.

The counsel Niranjan Rajagopal for ECI submitted that the commission is ready to consider the application filed by the petitioner earlier this month.

The counsel appeared for Vasan submitted that his client's application should have to be considered with seniority as his party held the symbol since 1996.

After the submission the bench directed the petitioner to file a fresh application before ECI enclosing all the documents. The bench also directed the ECI to consider the application with seniority and disposed of the petition.

In 1996 the ECI allotted the bicycle symbol to TMC when it was led by GK Moopanar for contesting the election. Subsequently, the ECI recognised TMC after its victory in 1996 election.

After the demise of Moopanar, TMC was taken over by his son Vasan and later it was merged with Indian National Congress(INC), in 2002.

Later, Vasan parted away from INC in 2014, approached the ECI seeking bicycle symbol again, however, his request was rejected as bicycle is a reserved symbol.

After the intervention of MHC, in 2019 the ECI agreed to allot bicycle symbol, if TMC contested in two seats. However, in 2019 election TMC was given only one seat in NDA alliance, hence, Vasan was not availed the bicycle symbol.

# ED SEEKS SPEEDY TRIAL IN JAILED MINISTER SENTHILBALAJI'S CASE

The Enforcement Directorate (ED) has requested the Madras High Court to consider a speedy trial in the job-for-cash scam case against Tamil Nadu DMK leader and former minister V. Senthil Balaji.

The ED in its affidavit before Justice Anand Venkatesh said that the former minister was intentionally stalling the commencement of the trial in the money laundering case.

The premier investigating agency urged the court to order a speedy trial instead of accepting the plea to grant bail before the completion of the trial.

The ED said in the court that it had time and again expressed its readiness for the commencement of trial but the accused was willfully delaying the process before the Principal Sessions Court in Chennai.

The investigating officer, Karthik Dusari also informed the court that Senthil Balaji will not be able to complain of long pretrial incarceration when the delay was caused by his own actions.

The investigating officer informed the court that the former minister was a highly influential person and hence there was a high probability of him misusing his liberty to influence or threaten witnesses.

Representing the ED, Special Public Prosecutor N. Ramesh, pointed out that the bail petitioner was arrested on June 14, 2023 and since then he was in judicial custody.

# ARRACK-FREE BOARD AT MASIGAM STIRS UP A DEBATE

A board put up by the Masigam village panchayat near Pernambut town claiming that arrack has been completely removed from the civic body limits has perplexed residents and onlookers.

Masigam is allegedly known for free sale of arrack and locals wondered the reason for civic chief to suddenly come up with such a declaration. Photograph of the board, which had gone viral, showed Pernambut PU ward member Dilliraja, Masigam panchayat president R Thiagarajan, and vice president Malathi flanking it. Some of the villagers said, the village and its surrounding hills are ideal spots for arrack distillers, who resort to various novel means to sell the stuff to consumers. "The 5,000-odd population knows and vocally supports the arrack sale and, hence, it was surprising that the panchayat president chose to go the other way."

A local official said, "Thiagarajan is a supporter of the ruling the DMK and hence it may be a PR exercise to help build his party's image, which has been dented by various other acts, ahead of the LS polls."

Panchayat president Thiagarajan told DT Next, "We received complaints about tipplers creating a nuisance and petitions were even submitted in two gram sabha meetings. Gudiyattam DSP Ramamoorthy also advised me to initiate action to curb this menace, which became so serious that private and TNSTC buses skipped the halt points in our locality."

He furhter said, "So well-known was Masigam as a spot where arrack was easily available.

# FARMERS STAGE RAIL ROKO TO REGISTER SUPPORT FOR MSP STIR IN NORTH INDIA

: Expressing solidarity to the protesting farmers in Delhi borders, a section of ryots in Tiruchy staged rail roko protest on Thursday and were arrested.

The members of Desiya Thennindiya Nadhigal Inaippu Sangam led by the State president P Ayyakannu went to the Cauvery bridge and blocked the trains.

They raised slogans against Union government and demanded to implement MS Swaminathan's recommendations of MSP for the farm produce.

They also voiced concern over Prime Minister Modi not fulfilling various demands despite completing 10 years.

On information about the road roko protest, a police team led by ACP Nivedha Lakshmi held talks with the agitating farmers and appealed to move away from track.

# 10,000 CONSTRUCTION JOBS UP FOR GRABS IN ISRAEL: OMC



Skilled tradesmen with experience in the construction sector have a chance to land a job in Israel, which would pay as much as Rs 1.37 lakh per month, said Overseas Manpower Corporation. The Corporation, a Tamil Nadu government undertaking, has invited applications from those in the State to work in Israel. In a statement, it said there are more than 10,000 vacancies in the construction sector in the Middle Eastern country. According to a press release from the recruitment agency, jobs are available for men with three years of experience in plastering, ceramic tile laying, building formwork and iron bending. The applicants should be between 25 and 45 years of age, it added. The selected candidates would be paid around Applicants may enrol them selves on www.omcmanpower.tn.gov.in, and may send their resumes, work experience certificates, educational qualification details and passport information to ovemclnm@gmail.com. Additional information is available on www.omcman power.tn.gov.in,(044-22505886/

NATION

# PM MODI TO JOIN FINAL DAY OF 'EN MANN EN MAKKAL' PADAYATRA IN TIRUPUR ON FEB 27



The BJP president of Tamil Nadu, K Annamalai on Monday said that Prime Minister Narendra Modi will participate in the party's 'En Mann En Makkal' padayatra on its concluding day. The BJP chief said that PM Modi who is set to embark on a two-day visit to Tamil Nadu, will join the padayatra on February 27 and will also attend various events on February 28. Annamalai arrived in Chennai earlier today after attending the BJP's two-day national convention in Delhi. While speaking to reporters at Chennai airport on Monday, Annamalai said, "PM Modi is scheduled to come to Tamil Nadu to attend the final day of 'En Mann En Makkal' padayatra on February 27 at Palladam. On Feb 27 and 28, PM Modi will be in Tamil Nadu to attend various events". The padayatra led by Annamalai will enter its 234th constituency Palladam in Tirupur district on February 27, which will be its last.According to sources, PM Modi is scheduled to hold a massive rally in Palladam to conclude the Yatra. BJP national president JP Nadda joined the yatra in Chennai when it completed 200 constituencies earlier this month. Union Minister Amit Shah flagged off the six-month-long padayatra in Rameshwaram in July last year. A significant presence of BJP State District Union executives, party members, and the general public was observed during the pada yatra. During the launch, Amit Shah said that 'En Mann, En Makkal' is to make Tamil Nadu free from family dynastic politics and corruption and to improve the law and order situation in the state."This Yatra is not only a political Yatra; the "En Mann En Makkal" (My Land, My People) Yatra is a Yatra to spread the Tamil language worldwide. It is to make Tamil Nadu free from family dynastic politics and corruption and to improve the law and order situation in the state. It is a yatra to end corruption and start development work," Amit Shah said.

# ECI REVIEWS POLL PREPAREDNESS IN TAMIL NADU AHEAD OF LOK SABHA ELECTIONS



Chief Election Commissioner Rajiv Kumar along with the top officials of the Election Commission of India on Friday reviewed poll preparedness in Tamil Nadu for forthcoming general elections to Lok Sabha. The Commission held meetings with representatives of political parties in the state.The review meetings were also held with District Collectors and Superintendents of Police, the officials said. Speaking to ANI after the meeting with ECI, DMK MP RS Bharathi said that they raised the issue of VVPAT machines to the Commission.While BJP demanded the installation of CCTV cameras at all booths adding that they have also demanded the deployment of para-military forces in sensitive booths. "As per our state leader, we have told our inputs to the Election Commission. All booths should be installed with CCTV Cameras. DMK have taken control and stopped the installation of CCTV in booths. The tender has been stopped. We have demanded paramilitary forces in sensitive booths," BJP leader Karate Thiagarajan said. "Star campaigners should be given permission. SPs, DIGs and IGs who favour DMK should be identified and given directions. Election must be done maintaining law and order," he added. CEC Rajiv Kumar, along with Election Commissioner Arun Goel and other key officials, arrived in Chennai to oversee the preparatory activities. Their visit was part of the Election Commission's effort to ensuring the integrity and transparency of the electoral process. The delegation met representatives from various recognised political parties. The discussions encompassed crucial aspects such as polling station arrangements, and the implementation of the electoral code of conduct.

# DELHI EXCISE POLICY CASE: ED MAY ISSUE 7TH SUMMONS TO KEJRIWAL



: The Enforcement Directorate (ED) may issue seventh summons to Delhi Chief Minister Arvind Kejriwal in connection with the excise policy case, said an agency source.

This comes after Kejriwal on Monday again skipped the Enforcement Directorate summons while party sources said that the validity of appearing before the ED is under the scrutiny of the court.

The ED had lodged a complaint in local court pursuant to Section 174 of the IPC against Kejriwal, accusing him of deliberately disregarding the initial three summons.

"The court has acknowledged this complaint, indicating a prima facie acceptance of Kejriwal's alleged offence, subjecting him to prosecution," said the ED sources.

"The court's focus lies not on the summons' validity but on Kejriwal's purported intentional disobedience of these three summonses," the ED sources added. On February 7, the Rouse Avenue court had issued summons to Kejriwal to appear on February 17 on ED's complaint for not complying with summons sent to him in connection with its probe into the money laundering case related to the now-scrapped excise policy matter. The ED on January 31 had issued summons to Kejriwal, and was told to appear before it on February 2. That was the fifth summons issued to the AAP Convenor. Before that ED had issued summons on January 18, January 3, December 22, 2023 and November 2, 2023.

The financial probe agency's complaint alleged that Kejriwal intentionally did not want to obey the summons and kept on giving "lame excuses".

"If a high-ranking public functionary like him disobeyed the law, it would set a wrong example for the common man, i.e., the Aam Aadmi," the agency had said.

**BUSINESS**

# NIFTY 500 COMPANIES DELIVER STRONG PERFORMANCE IN Q3




The Nifty 500 companies delivered strong performance and reported an earnings growth of 25 per cent YoY in 3QFY24, as per a report by Motilal Oswal Financial Services.

The earnings growth was again fueled by the healthy earnings performance of the BFSI and Auto sectors, which reported 22 per cent and 59 per cent YoY earnings growth, respectively. Oil and Gas reported healthy 40 per cent YoY earnings growth fueled by OMC's soaring profitability due to strong marketing margins.

The earnings performance of the Nifty 500 companies was propelled by just a few heavyweights. The top five companies, i.e., IOC, HDFC Bank, TTMT, GAIL, and Adani Power contributed 33 per cent to the incremental YoY accretion in earnings during the quarter, the report said.

Of the 496 companies within the Nifty 500 that have declared their Dec'23 quarter results, 329 companies recorded earnings growth, while 167 posted an earnings decline/loss in 3QFY24. Among the companies that declared profits, 251 posted an earnings growth of over 15 per cent YoY for the quarter, the report said.

Of the 18 sectors (incl. BFSI) within the Nifty 500, 13 sectors reported profit growth, while five posted a decline during the quarter. Auto reported a 59 per cent YoY jump in earnings in 3QFY24.

# RUPEE TURNS FLAT AGAINST US DOLLAR IN EARLY TRADE

The rupee traded on a flat note at 82.85 against the US dollar in early trade on Friday amid outflow of foreign funds and volatile crude oil prices in the overseas market.

Positive equity market sentiment and a weak American currency, however, provided support to the domestic unit, forex traders said.

At the interbank foreign exchange, the domestic currency opened at 82.87 and inched up further to trade at Thursday's closing level of 82.85 against the greenback.

The rupee appreciated 11 paisa to close at 82.85 against the US dollar on Thursday. The unit saw a cumulative gain of 19 paise in the previous four consecutive sessions since February 15, when it recorded the closing level of 83.05 against the dollar.

Meanwhile, the dollar index, which gauges the greenback's strength against a basket of six currencies, was trading 0.02 per cent lower at 103.85.

Analysts attributed the retreating dollar to cautious move by investors ahead of crucial manufacturing, employment and home sales data in the US.

Brent crude futures, the global oil benchmark, declined 0.42 per cent to USD 83.32 per barrel.

In the domestic equity market, the 30-share BSE Sensex was trading 104.66 points or 0.14 per cent higher at 73,262.90 points. The broader NSE Nifty climbed 34.45 points or 0.16 per cent to 22,252.90 points. The 50-share index had ended Thursday's session at its highest ever closing level of 22,217.45 points.

Foreign Institutional Investors (FIIs) were net sellers in the capital markets on Thursday as they offloaded shares worth Rs 1,410.05 crore, according to exchange data.

# VODAFONE IDEA SHARES JUMP 11% IN ANTICIPATION OF FUNDRAISE




Vodafone Idea shares jumped more than 11 per cent on Friday after the company announced a board meeting to consider fundraising.

Vodafone Idea shares were trading at Rs 18.11, up by 11.24 per cent.

VIL needs a sizable fund-raise to increase capex for restricting its subscriber loss.


VIL reported subscriber loss of 1.4mn MoM in December as the loss rate picked up from 1.1mn in November 2023, Emkay Global Financial Services said in a report.

Vodafone Idea said that a meeting of the board of directors is scheduled on February 27 to consider and approve the proposal relating to fundraising.

Vodafone Idea board of directors meeting is to consider and evaluate any and all proposals for raising of funds in one or more tranches by way of a rights issue, further public offer, private placement including preferential allotment, qualified institutions placement or through any other permissible mode and/or combination thereof as may be considered appropriate, by way of issue of equity shares or by way of issue of any instruments or securities including securities convertible into equity shares,

Global Depository Receipts, American Depository Receipts or bonds including foreign currency convertible bonds, convertible debentures, warrants, and/or non-convertible debentures including non-convertible debentures along with warrants, which may or may not be listed, the company said.

# KNEE-JERK MONETARY POLICY MOVE WON'T TAME INFLATION: DAS



The Reserve Bank of India's (RBI's) job to bring down inflation is not over, and any premature move on the policy front could undermine the success achieved so far on the price situation, according to RBI Governor Shaktikanta Das.

RBI's rate setting panel, Monetary Policy Committee (MPC), had met for three days from February 6-8. The panel decided to leave the key policy rate unchanged at 6.5 per cent for the sixth time in row.

It is almost a year now that the repo rate or short-term borrowing rate is at 6.5 per cent. In February last year, RBI hiked repo rate and held the policy rate since then.

According to the minutes of the February Monetary Policy Committee (MPC) meeting released by the central bank on Thursday, Das had said at this juncture, monetary policy must remain vigilant and "not assume that our job on the inflation front is over."

He stressed that the MPC must remain committed to successfully navigate the "last mile" of disinflation that can be sticky. Das made the remarks while voting for status quo in the key interest rate earlier this month.

"As markets are front-running central banks in anticipation of policy pivots, any premature move may undermine the success achieved so far," the governor said, as per the minutes.

He argued that price and financial stability were essential to sustain a long haul of high growth, and the monetary policy's objective was to stay focused on achieving the 4 per cent inflation target on a durable basis, keeping in mind the objective of growth.

Five of the six MPC members had voted to keep the short-term benchmark lending rate at 6.5 per cent. The rate-setting panel consists of three external and three RBI officials as members.

TO WIN BIG YOU SOMETIMES HAVE TO TAKE BIG RISKS